# ஆலயமணி

ஆசிரியர் : புலவர் ஈழத்துச்சிவானந்தன்



போதொடு நீர் சுமந்து ஏத்தி
புகுவார் அவர்பின் புகுவேன்

7-00

★ சுவையான

★ சுத்தமான

சைவ உணவு வகைகளுக்கு

யாழ்நகரில்

V

# விஷ்ணு விஹார்

# VISHNU VIHAR

**VEGETARIAN RESTAURANT**

163, Power House Road
JAFFNA.

# மணி ஓசை 6

## ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே.........

## நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய கலைவிழா

கலைகள் கண்ணைக் கவருவதோடு கருத்தையும் கவர்ந்து எண்ணரிய போதனைகளை வாழ்வியலுக்குத் தருவன. ஆடுதல், பாடுதல் நடித்தல் பேசுதல் மூலம் மனித ஆற்றல்கள் வெளியாகி புதிய போக்குகள் புறப்படவும் செய்கின்றன. ஒன்றின் வெளிக்காட்டல் இன்னொன்றின் கருக்கூட்டலுக்கு அடிப்படை அமைக்கின்றது. கலை மனித வாழ்க்கையின் களைகளைக்காட்டி நன் நிலைகளை நிலைக்கவைக்கும் தன்மையது. கலை என்றால் உருவகப்படுத்தல் என்ற பொருளுமாகும். கலைஞனின் உள்ளுணர்வில் ஏற்பட்ட எழுச்சி - அனுபவம் கலைவடிவங்களாகின்றன.

ஆயகலைகள் அறுபத்து நான்கு என்போம். இவற்றில் சிலவே மேடைக்கு வந்து பொதுமக்களுக்கு மகிழ்வளித்து அறிவூட்டுகின்றன. நடனம், நாடகம் பாட்டு பேச்சு சிற்பம் சித்திரம் என்பன அதிகமாக அரங்குக்கு வருகின்றன. அரங்கின்றி அம்பலமாகும் கலைகளும் உண்டு தமிழ் கலைகள் தனித்தன்மை வாய்ந்தவை. தமிழ்மொழியின் தனித்தன்மை போல தமிழ் வழிக்கலைகளின் இயக்கங்களும் தனிச்சிறப்புடையனவே. இதற்குரிய முக்கியகாரணம் இவற்றின் ஆசார அடிப்படையே.

தமிழர் கலாச்சாரம் என்பது கண்ணியத்துக்குரியது கட்டி வளர்க்கப்படவேண்டியது. கலாச்சார உயிரோட்டமே தமிழ் வாழ்வின் முழுமைக்கும் மகிழ்வுக்கும் ஆதார சுருதியாகும். இதனை வளர்க்கும் ஆரம்பப் பண்ணைகளாகக் கல்விக்கூடங்கள் விளங்குகின்றன. கல்விக் கூடங்களில் வளரும் கலைப் பயிர்கள் வாழ்க்கைக் கூடங்களைத் துலக்குகின்றன இதனாலேதான் கல்விக்கூடக் கலைவிழாக்களை மக்கள் முதன்மைப்படுத்துகிறார்கள்.

கடந்த 25.11.89ம் திகதி சனிக்கிழமைமாலை யாழ் நெடுந்தீவு கொத்தணியைச் சேர்ந்த நெடுந்தீவு மேற்குப் பாடசாலைகள் ஒன்றிணைந்து

மாபெரும் கலை விழாவினை சைவப்பிரகாச வித்தியாலயத் திறந்த வெளி அரங்கில் அதிபர் நா. சங்கரப்பிள்ளை தலைமையில் நடாத்தின. அங்குள்ள பெற்றோர், ஆசிரியர், நலன் விரும்பிகள் அனைவரும் அன்றிரவு முழுதும் - மாலை ஏழுமணி தொடக்கம் மறு நாள் அதிகாலை ஐந்து மணிவரை தங்கள் மாணவச் செல்வங்களின் கலைத்திறன்களை வெளிக் கொணர்ந்தும் கண்டு மகிழ்ந்தும் விருந்தினர்களுக்கு காட்டி மகிழ்ந்தும் இன்புற்றனர்.

மாணவர்கள் நமது நாட்டுச் செல்வங்கள் இவர்களின் அறிவையும் ஆற்றல்களையும் இனங் கண்டு வளர்க்க நாம் எல்லோரும் ஒன்று கூடி முயற்சி எடுக்க வேண்டும். ஆசிரியர்கள் கல்வியாளர்கள் கல்வித்துறை அதிகாரிகள் அனைவரோடும் பெற்றோர்களும் இணைந்து பிள்ளைகளின் எதிர்காலத்துக்காய் பாடுபடவேண்டும். நமது ஒவ்வொரு பிள்ளையிடமும் இருக்கும் அறிவும் திறமைகளும் விழிப்போடு செயற்பட்டால் அது நமக்கேதான் நன்மை தரும் என்ற சராசரி உண்மையை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். என்று அன்றைய பிரதம விருந்தினராய் கலந்து கொண்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.சி.புலேந்திரன் கூறிய போது மக்கள் அதனை மனங்கொண்டு பாராட்டியமை அவர்களின் கரவொலிகளால் தெரிந்தது.

ஒரு பிள்ளையின் வளர்ப்பு படிப்பு பாதுகாப்பு உருவாக்கம் பற்றிய பல கோணச் சிந்தனைகளைக் கருத்துக்களாகக் கலந்து கொண்ட சிறப்பு விருந்துனர்களான நெடுந்திவு கொத்தணி அதிபர் இரா. சின்னத்தம்பி ப.நோ.கூ.ச தலைவர் த.அம்பலம். பண்டிதர் கா.சு.பசுபதி, சு.நடராசலிங்கம் புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம், ஆலயமணி ஆசிரிர், ஆகியோர் விளக்கமாக எடுத்தியம்பினுர்கள்.

பேச்சு, நடனம், நாடகம், கிராமிய நடனம் பாட்டு, ஆங்கில நாடகம், தனிநடனம், அபிநயப்பாடல் மயில்நடனம் வழக்காடு மன்றம் முதலியவை அன்றைய விழாவின் நிகழ்ச்சிகளாகும்.

பிள்ளைச் செல்வங்கள் இன்றைய சமுதாயத்தில் படித்து நாளைய சமுதாயத்தில் வாழ்ந்து நாளை மறுநாள் வாழவைக்க வேண்டியவர்கள். அவர்கள் உள்ளங்களில் நல்லனவற்றை விதைத்துப் பயிராக்கி அறுவடை செய்ய வேண்டும். அவர்களுக்குள் கிடக்கும் ஆளுமைகள் கிடப்பில் இருக்காமல் அம்பலத்திற்குக் கொண்டு வரப்பட்டு அனைத்து மேம்பாடுகளுக்கும் உதவக்கூடியதாய் பேணிவளர்க்கப்பட வேண்டியவை. இந்த வளர்ப்புக்கு பாத்திகோலி விதையிட்டு நீர் பாச்சி வரம்பு கட்டி வேளா வேளைக்குக் கவனித்தால் அவற்றின் பயன் திரும்பவும் ஒரு சுற்று வட்டமாய் சுழன்று சமுதாயத்திற்கே உதவும். வாழ்வாங்கு வாழ்வதற்கு கல்வியும் கலையும் இருகண்களாய் போற்றப்பட வேண்டும்.

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடந்த கலைவிழா கல்விப்பண்ணையில் புதியவளர்ச்சிக்கு அடிகோலிய உணர்வைக் காட்டியது.

30-11-89 ஆசிரியர்,

முகப்பில் தெரியும் முகம்.

# சிவநெறி காட்டும் அருள் மொழி அரசி.

உங்களைத்தான்...... என்ன விழிக்கிறீர்கள்...... உங்களைத்தான் உங்களைத்தான்... .. இன்னும் கேட்கவில்லையா? இந்த ஆலயமணி இதழைப் படித்துக் கொண்டிருக்கும் உங்களைத்தான் கூப்பிடுகிறேன். இந்த இதழின் முகப்பில் தெரியும் முகத்தைப்பாருங்கள். இவரை எங்காவது பார்த்த ஞாபகம் வருகிறதா? இவர் பேச்சை இல்லை சொற்பொழிவை கேட்ட நினைவு வருகிறதா? எல்லாம் வருகிறது. பெயர் தான் வரவில்லை. இல்லையா? சைவத்தமிழ் உலகில் பணியாற்றும் அறிஞர்கள், கலைஞர்கள், தொண்டர்கள் அனைவரின் பெயரையும் முயற்சிகளையும் மக்கள் மனங்களில் பதியவைக்க எண்ணிய ஆலயமணின்யி இந்த ஆறுவது இதழின் அட்டைப்பட அம்மையார் திருமதி வசந்தா வைத்தியநாதன் ஆவார்.

காவிரி பாயும் சோழநாட்டில் தஞ்சாவூரிலே பரமேஸ்வர ஐயருக்கும்] அலுமேலு மங்கைக்கும் மகளாகப் பிறந்த இவர் சென்னைப் பல்கலைக் கழகத்திலே படித்து வித்துவான் பட்டம் பெற்றவர். திருநெறிய தெய்வத்தமிழையும் சிவநெறியையும் போற்றி வளர்க்கும் தருமபுர ஆதீனம் இவரைச் சமயப்பிரசாரகராக ஏற்று வழிப்படுத்தியது; சைவம் - சைவசித்தாந்தம் ஆகியவற்றின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருக்கும் தருமைச் சூழலில் வாழ்ந்ததால் தமிழ் நெறி-சிவநெறி மரபுகளை விளங்கிக்கொள்ளக்கூடியதாய் இருந்ததென்று கூறும் வசந்தா அம்மையார் தருபுர ஆதீனத்திற்குச் சொந்தமான குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

சைவத்தமிழ் அரங்குகளில் மிளிரும் வித்துவான் திருமதி ப.நீலா வசந்தா அம்மையாரின் சகோதரியாவார்; வங்கி முகாமையாளரான வைத்தியநாதன் அவர்களைத் திருமணம் செய்த பின்பு இலங்கைக்கு வந்த அம்மையார் தனது வாழ்க்கையை வீடு கோயில் சமயப்பணி என்று வரையறுத்துக் கொண்டார். தனது பணிகளுக்கு ஆதரவும் உற்சாகமும் தந்து ஊக்குவிப்பவர் தன் கணவரே என்று நிறைந்த பூரிப்போடு கூறும் வசந்தா அம்மையார் நாடகம் இசைபோன்று

சொற்பொழிவும் ஒரு உயர்ந்த கலை என்பதை ஒப்புக் கொள்வதோடு சொற்பொழிவுக் கலையின் வளர்ச்சிக்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் ஆலயமணியைக் கேட்டுக் கொண்டார்.

தனது சொற்பொழிவுக்கலை ஆர்வத்திற்கு முதல் வித்திட்டவர் தென் தமிழ்நாட்டின் சிறந்த சொற்பொழிவாளர்களில் ஒருவரான ரி.என் அனந்தநாயகி என்றும் அவ்வித்தினைப் பயிராக வளர்க்க உதவியவர் செஞ்சொற் கொண்டல் சொ. சிங்காரவேலனார் என்றும் நன்றியுணர்வோடு நினைவு கூருகின்றார். தேவி பூஜை செய்யும்படி தன்னைத் தூண்டியவர் நயினைவிசாகப் பெருமாள் என்றும் வீட்டில் சிறிதாக லலிதா சகஸ்ரநாமம் அபிராமி அந்தாதி முதலியவற்றோடு மேரு யந்திர வழிபாட்டிற்கு நெறிப்படுத்தியவர் பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள் என்றும் கூறும் இவர் சைவசித்தாந்த அடிப்படையில் சிந்தித்து எழுதவும் சொற்பொழிவு செய்யவும் சித்தாந்தரத்திநாகரம் முத்து சு. மாணிக்கவாசகர் அத்திபாரமிட்டிருக்கிறார்.

நமது நல்லை ஆதீனம் வசந்தா வைத்தியநாதன் அவர்கட்கு அருள்மொழிஅரசி என்னும் பட்டத்தினையும் தருமபுர ஆதீனம் தொண்டர் திலகம் என்னும் பட்டத்தினையும் புளியங்கூடல் மகாமாரியம்மன் ஆலயம் ஸ்ரீ வித்தியாபூஷண் என்னும் பட்டத்தினையும், நாவலர்சபை அருள்நெறிமாமணி என்னும் பட்டத்தினையும் துச்சன் தோப்பு விநாயகர் ஆலய பரிபாலனசபை செஞ்சொற்செல்வி என்னும் பட்டத்தினையும் வழங்கியுள்ளமை இவருடைய சிவசேவைக்குக் கிடைத்த மரியாதைகளே.

அருள்நெறி பரப்ப இலண்டன் மாநகருக்குச் சென்று சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ள வசந்தா அம்மையார் தமது கருத்துக்களை நூல்வடிவில் வெளியிட வேண்டும் என்பதே ஆலயமணியின் விருப்பமாகும்.

— ஈழத்துச்சிவானந்தன்

# சிங்களத்திலும் கன்னடத்திலும் திரிபுற்று வழங்கும் மனுச்சோழன் வரலாறு

— சொக்கன்

'வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்'

( சிலப்பதிகாரம், வழக்குரைகாதை 53-55 )

'அரமனை வாயிலிற் கட்டிய ஆராய்ச்சி மணியின் நா நடுங்கியது. அதனை நடுங்கவைத்த ஆவினது கடைவிழியில் நீர் உதிர்ந்தது. இவை கண்ட மன்னனின் நெஞ்சமோ இவ்விரண்டாலும் சுடப்பெற்று வெந்தது. நடந்ததை அவன் விசாரித்தான்; ''நல்லாவின் கன்றைத் தேர்க்காலில் நசித்துக் கொன்றான் தன் மகன்'' என்ற உண்மை வெளிப்பட்டது. தன்மைந்தன் குலம் விளக்க வந்த சேர்மகன் என்றோ, அருந்தவம் இயற்றி 'வாராது வந்த மாமணி' என்றோ சிறிதும் சிந்திக்கவில்லை அவன். ஆவுறுதுயரைத் தானும் அடைந்திடத்தன் அரும் பெறற் புதல்வனைத் தேர்க்காலில் இட்டுத் தன் செங்கோல் வளையாது காத்திட்டான் அம் மாமன்னன்.

கண்ணகி வாயிலாகக் கொடுங்கோலன் நெடுஞ்செழியனுக்கு இளங்கோவடிகள் எடுத்துரைத்த, இடித்துரைத்த இனிய கதை இது. இந்தக் கதை அப்புலவர் பெருந்தகையை எவ்வளவு தூரம் கவர்ந்து ஆட்கொண்டது என்பதற்கு, இதனை இதனோடு விடாது வாழ்த்துரைகாதையில், 'கறவை முறை செய்தோன்' என்றும் 'கறவை முறை செய்த காவலன்' என்றும் ஒரு முறைக்கு இருமுறை ஆராமையோடு அவர் எடுத்துரைப்பதே சான்றாகும்.

மகாமகோபாத்தியாய, டாக்டர் உ.வே. சாமிநாதையர் சிலப்பதிகாரத்தின் பதிப்பாசிரியர். அவர் வழக்குரைகாதையின் அடிக்குறிப்பிலே மனுநெறிகாத்த இம்மன்னனின் 'செயற்கரிய செயலை'ப் பின் வந்த புலவர் பெருமக்கள், எவரெவர் எவ்வெவ்வாறு தத்தம் நூல்களிலே எடுத்துக் கூறியுள்ளனர் என்று பெரும் பட்டியலே தந்துள்ளார்: அவற்றின் மூலம் மனுச்சோழனின் நிலைத்த புகழும், அவன் மீது புலவர்கள் கொண்ட பெருமதிப்பும் நன்கு புலனாகும்.

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்
(திருக்குறள், பொருட்பால் அதிகாரம்55, செங்கோன்மை 7)

"வையகத்தை எல்லாம் அரசன் காக்கும்; அவன்றன்னை அவன் செங்கோலேகாக்கும். அதனை முட்டவந்துழியும் முட்டாமல் செலுத்துவானாயின்" என்று மேற்காட்டிய திருக்குறளுக்கு உரை வழங்கிய பரிமேலழகர், "முட்டாமல் செலுத்தியவாறு, மகனை முறை செய்தான் கண்ணும், தன் கைகுறைத்தான் கண்ணும் காண்க" என்று சான்று காட்டியுள்ளமையும் மனுச்சோழனின் பெருமைக்குச் சிறந்த கட்டியமாகும்.

சிவனடியார்தம் திப்பிய வரலாறுகளைப் 'பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவர், சேக்கிழார் பெருமான். சைவ நீதியின் சால்புரைத்திட விழைந்த அவர், தமது திருத்தொண்டர் பெரிய புராணத்தின் முதற் காண்டத்தில் மூன்றாவதாய் அமைத்துக் கொண்ட 'நகரச்சிறப்பு' திருவாரூரின் பெருமையோடு பெருமையாக, 'மன்னுசீர் அநபாயன் வழிமுதல் மின்னும் மாமணிப் பூண்மனு வேந்த'னின் வரலாற்றையும் விதந்துரைக்கக் காண்கின்றோம். ஆனின் 'புனிற்றிளங் கன்று' தன் மைந்தனின் தேர்க்கால் மீது விசையினாற் செல்லப்பட்டு இறந்தது. அஃதறிந்த மனு வேந்தன் தன் மகனைத் தானே தேர்க்காலிலிட்டுக் கொன்றதாகிய வரலாறு நகரச் சிறப்பில் உணர்வு பூர்வமாக விரிக்கப்படுகின்றது.

"வழக்கொன்று நீர்மொழிந்தால் மற்றதுதான் வலிப்பட்டுக்
குழக்கன்றை இழந்தலறும் கோவுறுநோய் மருந்தாமோ?
இழக்கின்றேன் மைந்தனையென் றெல்லீரும் சொல்லிய இச்
சழக்கின்று நானிசைந்தால் தருமந்தான் சலியாதோ?"

என்று நடுநின்று நீதிபேசிய மனுச்சோழனின் வரலாறு தமிழுக்கும் சைவத்திற்கும் பெருமைசேர்க்கும் ஒன்று என்பதில் ஐயம் இல்லை.

ஆனால், 'நீதிவழுவா இந்நெறிமுறை' எமக்கு மட்டும் சொந்தம் அன்று என்பதற்கு இதே போன்ற கதைகள் பிறமொழிகளிலும் சிற்சில திரிபுகளோடு வழங்கி வருவது குறித்துக் காட்டவேண்டிய ஒன்றாகும். இலங்கையின் பழைய வரலாற்றினை எடுத்துரைக்கும் மகாவம்சத்தில் வரும் எல்லாள மன்னனின் கதை, கன்னடமொழிக்காவியமான "ராஜசேகர விலாசத்தில் (ஷடக்ஷரதேவர் இயற்றியது) வரும் ராஜசேகரன்கதை என்ற இரண்டும் எவ்வாறு மனுச்சோழன் கதையினை ஒத்திருக்கின்றன என்று காண்போம்.

கி.பி. 5 ஆம் நூற்றுண்டில் மகாவிகாரைப் புத்தகுருமாரால் எழுதப்பட்ட மகாவம்சம் புராணத்தன்மை பொருந்தியது புத்தசமயத்தையும் சிங்கள மொழியையும் சிங்கள இனத்தையும் பேராதரித்த சிங்கள மன்னர் பற்றிய விதந்துரைகளே நிறைந்த இந்நூலிலே, தமிழராதிக்கத்தை ஒழித்த துட்ட காமினி என்ற துட்டகைமுனு, தன்னிகரிலலாத் தலைவனுகப் போற்றப்படுவதில் வியப்பில்லை. எனினும் மகாவம்சம் துட்டகாமினியின் பெரும்பகைவனுகவும், அவனுல் கொல்லப்பட்டதுவரை ஏறக்குறைய நாற்பத்துநான்கு ஆண்டுகள் இலங்கையைச் செங்கோல் வழுவாது ஆண்டவனுகவும் கொள்ளும் எல்லாளன் (கி பி145-101) பெருமைகளைப் போற்றத் தவறுமையும் குறிப்பிடத் தக்கதே.

எல்லாளனை எல்லரன் என்ற பெயராலும் வழங்குவதுண்டு. இவன் தனது ஆட்சிக்காலத்தில் ஒருநாள், தன் சாரதிசெலுத்திய தேரிலே அநுரதபுர வீதி ஒன்றில் வந்து கொண்டிருந்தான். அது காலை இவனது தேரால் இடியுண்டு, புத்தவிகாரம் ஒன்றின் சுவருக்குச் சிறிது ஊறு ஏற்பட்டது. இதனை எல்லாளனுலே தாங்கக் கூடவில்லை. ''என் குடிமக்களது சமய நிறுவனம் ஒன்றிற்கு என்னுல் ஊறுவிளைந்தது. இவ்வூறிற்குப் பரிகாரமாக நான் என் உயிரையே அளிப்பேன்'' என்று இவ்வூற்றிற்குப் பரிகாரமாக நான் என் உயிரையே அளிப்பேன்'' என்று இவன் உறுதி பூண்டவனுய்த், தேர்க்காலில் வீழ்ந்துகிடந்து தன்னைத் தேராலே நெரித்துக் கொல்லுமாறு சாரதியை வேண்டினுன். சாரதியோ இம்மன்னனின் பெருந்தன்மையை நோக்கிய வியப்பும், தான் செய்யாத குற்றமாயினும் உண்டான பாதிப்புக்குத் தானே பொறுப்பு என நினைந்து உயிரை விட முற்பட்ட நீதியை உணர்ந்த பெருமதிப்பும் உடையவனுய், மன்னனை விளித்து, ''வேந்தரே இது என்னுல் விளைந்த குற்றம் இதற்குத் தாங்கள் பொறுப்பல்லீர்' ஊறடைந்த புத்த விகாரைக்கு நட்டஈடு வழங்குவதே தக்கது'' என்று மன்றுடினுன். அவ்வாறே எல்லாளன் அந்த விகாரையின் உடையவருக்குப் பெரும்பொருள் ஈந்து மன்னிப்பும் கேட்டு மன அமைதி பெற்றுன்.

இத்தகைய நீதிமானை எதிர்த்து நடத்திய தனிப்போரிலே, இவன் துட்டகாமினியால் கொல்லப்பட்டான் என்பது உண்மையே. எனினும் இவனது புகழை நிலைநிறுத்தும் வகையில் துட்டகாமினி இவனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பியதும், அது எழுப்பப்பட்ட இடத்தால் செல்வோர் தம் வாத்தியங்களை வாசிக்காது அமைதி காத்து மதிப்பு செலுத்த வேண்டும் என்று கட்டளை பிறப்பித்ததும் இவனின் புகழினை நிலைபேறுடையதாக்கி விட்டன. எல்லாளன், தமிழ் மன்னன் என்ற உண்மை, தமிழர்யாவரும் நெஞ்சு நிமிர்த்திப் பெருமைகொள்ள வைக்கின்றது என்பதற்கு ஐயம் இல்லை.

இனி ராஜசேகரன் கதையைப் பார்ப்போம். இக்கதை, தமிழ் அறிஞரான வே. வேங்கடராஜுலுரெட்டியார் எழுதிய 'தென்மொழி கள்' என்றநூலில் 'கன்னட இலக்கியம்' என்னும் பகுதியில் வருகிறது. மாஸ். வாஸன் கம்பெனி, (மயிலாப்பூர்) 1960ல் வெளியிட்ட நூலின் 37-41 ஆம் பக்கங்களில் உள்ளது.) ரெட்டியார் எழுதிய கதைச் சுருக்கத்தினை எவ்வித மாற்றமுமின்றி அப்படியே தருகிறேன்.

சோழநாட்டின் நடுவில் தருமவதி என்னும் ஊரில் சத்தியேந்த்ர சோழன் என்னும் அரசன் அரசு செலுத்தி வந்தான். அவன் மந்திரி பதிமோஹி என்னும் பெயரினன் அவனுக்கு மிதவசனன் என்னும் புதல்வன் இருந்தான்.

அரசனுக்குப் புத்திரப்பேறு இல்லாதிருந்தது. அவன் தேவி அமிர் தவதி என்பவள் ஒருநாள் சிவபூசனை செய்தபின் புராணங்கேட்கையில், மார்க்கண்டேய சரிதத்தில் மார்க்கண்டேயனது பாலலீலைகளைக் கேட்டு, தனக்கு அத்தகைய மகவு இல்லாததை எண்ணி வருந்தினாள்.

சில நாட்களில் தம்மிடம் வந்த முனிவர்களை வணங்கி அரசன் தமது குறையை விண்ணப்பிக்க, அவர் ''சிவபெருமான் நிஷ்களமாய் இருந்தவர் 36 சத்தியை உடையவரானார். அவருடைய 25 லீலைகளை யும் கேட்பவர் எல்லா நன்மைகளையும் அடைவர்'' என்றனர். அத னைக் கேட்டு அரசன் முதலியோர் மகிழ்வுற்றனர்.

பின்னர், அரசனுக்கு அமிர்தவதியினிடம் ஒரு புதல்வன் பிறந் தான். அவனுக்கு ராஜசேகரன் என்னும் பெயரையிட்டுப் பேணி வளர்த்தனர். அவனும் மந்திரி குமாரனும் அரசர்க்குரிய கலைகளைக் கற்று விளங்கினர்.

ராஜசேகரன், அரசியலை மேற்கொண்டிருக்கையில் ஒருநாள், தன் நாட்டில் வாழ்ந்த வேடர்தலைவன் விடுத்த தூதுவனால், சிங்கள தேசத்து அரசனுடைய படைவீரரின் அடாச் செயலை அறிந்து மந்திரி குமாரனோடு கூடிப் போர்புரியச் சென்றான். அதனையறிந்து சிங்கள தேசத்தரசன் போருக்குப் புறப்பட, அப்பொழுது, நீதிபூஷணன் என் னும் மந்திரி, ராஜசேகரனுடைய படைவன்மையைப் பலபடப்புகழ்ந்து கூற, அதைக் கேட்டு அரசன் சினந்தணிந்து, அமைச்சர்முதலியோரு டன் சென்று ராஜசேகரனைத் தன்னாட்டுக்கு அழைத்துச் சென்றான். அப்பொழுது அவன் மகள் 'ஸர்வமங்களை' என்பவள் ராஜசேகரனைக் கண்டு காதல் கொண்டாள். பின்னர், இலங்கேசனால் தரப்பெற்று, ராஜசேகரன் ஸர்வமங்களையை மணந்து, அவளுடன், தன்னகரத்தை அடைந்து வாழ்ந்திருந்தான்.

ஒருநாள் ராஜசேகரன் அவையில் வீற்றிருக்கும் போது சிந்துரா ஜன் வந்து சிறந்த இரண்டு குதிரைகளைக் காணிக்கையாகக் கொடுத்து, யானைமேல் போயினுன். பின்னர், குமாரன் (ராஜசேகரன்) அக்குதிரையை ஊர்ந்துவர விரும்பி மந்திரிகுமாரனிடம் சொல்ல, அவன் ''தர்மேந்திர அரசன் மகன் தேரில் வரும்போது, தேருருளில் சிக்கி ஒரு கன்று மடிய அரசன் தன்மகனை அவ்வாறு கொன்ருன். ஆதலின், சிவனடியார் மிக்க இவ்வூரில் இப்புதிய குதிரைமேல் ஊர்தல் தகாது'' என்று அறிவுரை கூற, அரசகுமாரன் நியாயங்களைக் கூறி அவனை உடன்படுவித்தான்.

மறுநாட்காலையில், அவரிருவரும் சிவபூஜை செய்து, குதிரையை இவர்ந்து, அரசவீதி கடந்து நகர்ப்புறத்தே சென்று, அங்கு நாற்படைகளின் களியாட்டுப்போரைக் கண்டு மீண்டு, பலவகைக்கதிகளால் யானைகளைக் கடந்து நகரினுள் வருகையில், திருக்கொளவிநாச்சி என்னும் சிவபக்தையின் ஐந்து வயசு மகன் சங்கரன் என்பவன் அவ் வாரவாரம் கேட்டு, அதனைக் காண விரும்பித் தெருவிற்கு வந்து கூட்டத்துட் புகுந்து பார்க்கையில் இடறிக் கீழ் விழுந்து அழுது கையையூன்றி எழுந்திருக்க, அப்பொழுது, அரசகுமாரன் தன் குதிரையே அவன்மேல் தாவிச் செல்லுமாறு விடுத்தான். மந்திரி குமாரனது குதிரை காலால் சிறுவனின் தலையைத் துணித்தது. அதனைக்கண்டு அவரிருவம் இரங்கி வருந்தினர். நகரமாந்தர் அரற்றினர்.

திருக்கொளவிநாச்சி நகரமாந்தர்மூலம் தன் மகன் இறந்த செய்தியை அறிந்து சென்று, அங்குக் குறையுடலைக் கண்டு, எடுத்துப் புலம்பி, அரண்மனையின் அந்தப்புரத்தின் வெளிவாசல் முன் நின்று அரற்றினுள். அரசன் அச்செய்தியையுணர்ந்தான். பின்னர், அரசன் திருக்கொளவிநாச்சி கூறிய வரலாறு முற்றும் கேட்டுத் தன்மகனையும் மந்திரி குமாரனையும் வருவித்து விசாரித்தான். அவர்கள் ஒவ்வொருவரும் தாமே கொலைக்குக் காரணம் என்று கூறினர்.

அரசன் தன் மகனே காரணமென்றுணர்ந்து, அவனைக் கொல்லுமாறு மந்திரியிடம் கூறினுன். மந்திரி அவ்வாறு செய்ய மனமின்றித் தன்னைத் தானே மாய்த்துக் கொண்டான். அதனையறிந்த அரசன் பணியாளன் ஒருவனை விடுத்தான். அரசகுமாரன் அவனை உடம்படுவித்துக் கொலையுண்டான். பணியாளன் கொண்டுவந்த அத் தலையைக் கண்ட அரசன், அது பஞ்சாக்ஷரத்தைச் சொல்லிக் கொண்டிருத்தலை உணர்ந்து வியப்புற்ருன். அப்பொழுது திருக்கொளவிநாச்சி அங்கெய்தி, அரசகுமாரனைக் கொல்வித்ததற்கு வருந்தி, வாளால் தன்னை மாய்த்துக்கொண்டாள். அதபின் அரசன் தன்னைத்தானே மாய்த்துக்கொண்டான். இவற்றையறிந்த மந்திரி குமாரன் தன் தலையைத் துணித்துக் கொண்டான். அதன்பின் மந்திரி மனைவியும், மந்திரி குமாரன் மனைவி

யும் சாகத்துணிய, அப்போது அரசியும் அங்கு வந்தாள். பின்னர் இளவரசன் மனைவியும் அங்குற்றாள். அவர்களெல்லாரும் கையில் வாளைப் பிடித்துக்கொண்டு தத்தம் நாயகரின் எதிரில் நின்று தலையைத் துணித்துக் கொள்ளப்போகும் சமயத்தில், பார்வதி இரங்கி வேண்டிக்கொள்ள, சிவபெருமான் தோன்றி, அரசியின் கையிலிருந்த வாளை வாங்கி வீசியெறிந்துவிட்டு, '' உனக்கு வேண்டியதைக் கேள்'' என்று பணிக்க, அரசி முதலில் இறந்த சிறுவனுக்கு உயிரருளுமாறு வேண்டினாள். பின்னர் பெருமானாணைப்படி, திருக்கொளவிநாச்சியும் உயிர்த்தெழும்படி வேண்ட, சிவபெருமான் அனைவரையும் உயிர்ப்பித்தருளினார்.

அதன்பின், சிவபெருமான் அவர்களுடைய பக்தியை வியந்து, அவர்களனைவரையும் விமானத்திலேற்றிப் பார்வதியோடு கயிலைக்குச் சென்றார்.

மகாவம்சத்தில் விதந்தோதப்படும் எல்லாளன் தமிழ் மன்னன்; ராஜசேகர விலாசத்திற் போற்றப்படுபவன் சோழநாட்டு மன்னன். இவ்விரண்டு செய்திகளையும் நோக்க, இக்கதைகளின் மூலாதார உந்து, சத்தியாகத் தமிழகத்து மனுச்சோழனின் கதையே விளங்கியிருக்கலாம் என்று கொள்வதிலே தவறில்லை.

இயம்பினர் ஒருபால்

உள்ளத்தின் வளர்ச்சிக்கும் உயிரின் வளர்ச்சிக்கும் வழிபாடு முக்கியமாகும். இறைவன் எங்கும் இருக்கின்றான் என்றாலும் கோயிலில் தான் அவனை உணரமுடிகிறது. பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தனாகிய அவன் கோயிலிலும் இருக்கிறான் என்பதை நம்பிக்கையோடு ஏற்றுக் கொள்கின்றோம். ஏனைய இடங்களில் இறைவன் விளங்குவதற்கும் கோயிலில் எழுந்தருளி இருப்பதற்கும் வேறுபாடு உண்டு. இறைவனை எங்கும் காணவேண்டுமானால் அவர்களுக்கு ஞான பக்குவம். காணுகின்ற பொருள்கள் அனைத்திலும் கடவுளைக் காணுகின்ற ஞானிகளுக்கே அந்த நிலை ஏற்றது. அத்தகையோர் ஒரு சிலரே. ஏனையோர் கோயிலிலே அமைக்கப்பட்டிருக்கும் விக்கிரகங்களையும் வடிவங்களையும் காண்பதனால் தான் இறைவனை உணருகிறார்கள்.

அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி

சிறுகதை

# மோகவாசல்

ரஞ்சகுமார்

தேவர்கள் இறைவனிடம் ஓடினார்கள்.

விசுவாமித்திரனின் தவவலிமையினால், அவர்களது தேஜஸ் குன்றிக் கொண்டே போயிற்று.

இறைவனின் இதழ்களில் குமிண்சிரிப்பு. கண்களில் விஷக்கிறக்கம்.

"தேவ தேவா! .... எமைக்காத்தருள்க......" என தேவர்கள் இறைவனிடம் இறைஞ்சிய ஒலியில் சப்த சமுத்திரங்களின் குமுறல்களும் தோற்று அடங்கின.

இறைவன் மதனை அழைத்துவர பூதகணங்களை ஏவினான். கரும்பு வில்லும் பஞ்சமலர்களும் மணம் பரப்ப மதனும், அவனுடன் குனிந்த சிரத்துடன் ரதியும் வந்தனர்.

இறைவன் இதழ்களில் குமிண் சிரிப்பு மேலும் சற்றே விரிந்தது.

ரதி நடுங்கினாள். தன் நாதனுக்காக ஏங்கினாள்.

விசுவாமித்திரன் சினத்தை ஈரேழு உலகமும் அறியும்.

அவனது தவத்துக்கு பெண்களால் குந்தகம் ஏற்பட ஏற்பட அவனது கோபாக்கினி கொழுந்துவிட்டு ஜ்வாலித்தது.

தேவர்கள் விடாப்பிடியாக முயன்றனர், ரிஷிகள் அதற்கு நெய் வார்த்தனர்.

சகல சம்பத்துகளும், நால்வகைச் சேனையும், விசாலித்த தேசத்தையும் உடைய கௌசிகராஜன் பிரம்ம ரிஷி என பட்டமும் பெற்று விடுவானாகில்......

வசிஷ்டன் கர்வபங்கம் செய்யப்படுவான் என அவர்கள் ஏங்கினர்.

பெண்களால் உலகில் கலகம் விளையும் என்பது எவ்வளவு தூரம் பொருந்தி வருகிறது. என்ன தான் ஒரு பசுவேயாயினும், சபலையும்

ஒரு பெண்ணினம் அன்றோ? அவளை மோகித்து, வசிஷ்டனிடம் இச்சித்ததனால் அல்லவா கௌசிகராஜன் கடும் விரதம் அனுஷ்டிக்க விதியுண்டாயிற்று;

விசுவாமித்திரனுக்கு பெண்களை எண்ண எண்ண சினம் பொங்கிற்று.

தேவர்களும் சளைத்து விடாமல் அப்சரஸுகளை மாறி மாறி ஏவினர். முனிவனும் தன்வயமிழந்து சபித்தல் தொடர்ந்தது. நீண்ட நெடுங்காலமாக தபஸ் இருந்து தான் பெற்ற ஆற்றல்களையெல்லாம் விசுவாமித்திரன் நொடிப்பொழுதுகளில் இழந்தான்.

மீண்டும் பூரக ரேசக முதலிய அட்டவாயுக்களையும், ஐம்புலன்களையும் மிகமுயன்று அடக்கி நிர்ச்சிந்தையாக லயிக்க முயன்றான்.

தேவர்கள் மறுபடி மறுபடி இறைவனிடம் ஓடினர்.

இறைவன் மேனகையை அழைத்துவர பூதகணங்களை ஏவினான்.

வனத்தில் வசந்தம் பூத்துக் குலுங்கிற்று. மலர்களின் நறுமணமும் தேறலின் போதையும் தித்திப்பும் எங்கும் நிறைந்தன. காட்டுப்பட்சிகளின் உல்லாசம்மிதந்த கூவல் ஒலிகளும், வனவிலங்குகளின் வேட்கை ததும்பும் களிப்பு ஒலிகளும் எங்கும் எதிரொலித்தன.

முனிவனது சிந்தை தடுமாறிற்று. மதன் தருணம் அறிந்து குறி பிசகாமல் கணை தொடுத்தான்.

கூடவே, மின்னல் ஒன்றைப் பற்றியவளாய் மேனகை பூமியில் குதித்தாள்.

அவளது தேகத்தை தழுவிய காற்றைச் சுவாசித்ததுமே, முனிவன் சிலிர்த்தான். மிருக வேட்கையிலை அலைப்புற்றான். முன்னே ராஜனாயிருந்த காலத்தில் போகசமுத்திரங்களில் சளைக்காது நீந்தித் திளைத்தவனல்லவா?

தாபத்துடன் 'மேனகா' என முனிவன் கூவி அழைத்தான்;

தேவர்கள் களிகொண்டு துள்ளினர். ரிஷிகள் 'ஓம்' என கேலியாக மந்திர உச்சாடனம் செய்தனர்.

இறைவன் இதழ்களில் புன்சிரிப்பு. விழிகளில் விஷக்கிறக்கம்.

ரதிதேவி ஆசுவாசப் பெருமூச்சு விட்டாள். தன் நாதன் தோள்களில் சாய்ந்தாள்.

கீழே பூமியில்; மேனகை முனிவனை விழுங்கிக் கொண்டிருந்தாள்.

முனிவனது விரதங்கள் மட்டுப்படுத்தப்பட்டன. ஈவிரக்கமற்ற அவளது உண்மைதேடல் தளர்த்தப்பட்டது. ஒரேவிதமான சலிப்பூட்

டும் தடத்திலே அவனது வாழ்க்கை செல்லலாயிற்று திகட்டும் வரை மேனகையை அவன் தழுவிக் கிடந்தான்.

ஞானத்தை எய்துவதற்கு பதில், குழந்தையை ஏந்த வேண்டிய வஞானன் முனிவன்!

முனிவனின் காய்த்துப்போன கரங்களில் குழந்தை வீரிட்டழுதது. விதி சிரித்தது. கானகம் மானிடவாழ்வின் விசித்திரங்களை தரிசித்த தில், பெருமூச்செறிந்து ஓய்ந்தது.

மேனகைக்கு முனிவனிடம் சலிப்புத் தட்டிற்று. முனிவனது தழு வல்களில் முன்பு போல மூழ்கடிக்கும் ஆவேசம் இருக்கவில்லை. தவிர, தேவலோகத்தின் சௌகர்ய வாழ்வு எங்கே, கிழங்கையும் கனியை யும் புசித்து தர்ப்பையின் மீது உறங்கும் இந்த மானிடன் எங்கே?

போகப்போக முனிவனின் உடலில் இன்பவேட்கை குன்றிற்று. ஆண்டாண்டு காலமாக அடக்கிவைத்திருந்த இந்திரியங்கள் பீரிட்டுப் பாய்ந்து சென்றதும், முனிவனுக்கு பெண்ணைக் கூடுவதில் ஒருவித மான யந்திரீகப் பாங்கு மேலோங்கிற்று. மேனகையின் மேனியில் புதுமை எதுவுமில்லாமல் போவதாகத் தெரிந்தது. அவள் ஒரு சாதா ரண பெண்ணே போன்று தோன்றினாள். அவளைக் காண்பதில் சலிப் பும் வெறுப்பும் தோன்றியது.

முனிவன் 'திருதிரு' வென விழித்தான்.

வீணை ஒலி தூரே கேட்டது. நாரதனின் மிதியடிகளின் ஓசையும் கலந்து வந்தது.

கிண்டலுக்கும், கலகத்துக்கும் பெயர் பெற்ற நாரதன்.........

முனிவன் கூனிக் குறுகி நின்றான். அதலபாதாளத்தில் வீழ்ந்து புரள்வதாய் உழன்றான்.

ஒரு பொறிதட்டிற்று

மோகம் என்பது ஒரு வாசல் தான். கண்ணையும் கருத்தையும் பறிக்கும் அலங்காரமான மாயவாசல். அந்தவாசலை ஒரு தரம் நிதா னமாகக் கடந்துவிட்டால் அதற்குமப்பால் பெரும் அதிசயங்கள் ஒன் றும் நிசழக் காத்திருக்கவில்லை, என முனிவன் உணர்ந்தான். மோக வாசலைக் கடக்கும் தருணத்தில் ஏற்படும் கணநேரச் சிலிர்ப்புக்காக, அண்டாண்டு காலமாக கட்டி வளர்த்த தனது தேஜஸை இழந்து விட்டோமே எனக் கலங்கினான்.

வசிஷ்டனின் பரிகாசத்துக்கு ஆளாவோமே எனவெண்ணி ஏங்கினான்

முனிவன் மேனகையை கடைசித் தடவையாக அழைத்தான். அவனது குரலில் வழமைக்கு மாறான ஏதோ ஒன்று இருந்தது.

மேனகை அஞ்சினுள். சாபத்தை எதிர்கொள்ள, நடுங்கும் இதழ் களுடன் காத்து நின்ருள்.

முனிவனே, ஒரு சிசுவை ஏந்துதல் போன்று அவளை மென்மை யாகத் தழுவி நேத்திரங்களிலும் நுதலிலும் முத்தமிட்டான்.

"போய் வா மேனகா!......... ஞானத்தின் வாசற்கதவை நீ எனக் காகத் திறந்து விட்டாய்!!"

மேனகையை அழைத்துச் செல்ல மின்னல்கள் இறங்க ஆரம்பித் தன.

"ஸ்வாமி...... தங்களது குழந்தை.........?"

"குழந்தை என்னுடையதல்ல பெண்ணே......... அது பூமியின் புத்திரி...... பூமி அவளைக்காக்கட்டும்." என்று மிகத்தெளிவுடன் பதில் சொன்னுன் விசுவாமித்திரன்.

முனிவன் தனது பயணத்தை மீண்டும் மிக நிதானத்துடன் ஆரம் பித்தான். மிகவடர்ந்த கானகங்களையும் பனிபடர்ந்த மலைகளையும் நோக்கி அவன் சென்ருன்.

மேனகை அவன் சென்ற திக்கை நோக்கி சிரம் தாழ்த்தி ஒரு முறை தொழுதாள். அவனது பாததூளியை எடுத்து சிரசில் தரித் துக் கொண்டு, பிரகாசமான ஒரு மின்னலுடன் மறைந்தாள்.

நிராதரவாக விடப்பட்ட குழந்தை அழுதது. வாழ்க்கை எதிரே நின்று அதைப் பயமுறுத்தியது. அழட்டும்! பூமியில் பிறந்தவர்கள் அழாமல் இருத்தல் கூடுமா?

விசுவாமித்திரனின் உறுதிமிக்க பயணத்தைக் கண்டு தேவர்கள் வெட்கித் தலை குனிந்தனர். ரிஷிகள் இடிந்தனர்.

"ஹே...! முனிசிரேஷ்ட, உனது இஷ்டசித்தியை நீ அடைவாய்" என ஒரு அசரீரி முழங்கிற்று.

தேவலோகம்.

இறைவன் முகத்தில் சதா குமிண்சிரிப்பு கண்களில் விஷக்கிறக் கம்.

இறைவிக்கு ஒரே வியப்பு. கூடவே சந்தேகம்.

நாதா, தாங்கள் முனிவனுக்கு உதவி செய்தீர்களா, அல்ல தேவர் களுக்கா?"

"யாருக்கும் எனது உதவி தேவையில்லை, உபத்திரவமும் தேவை யில்லை. அவரவர் அவரவருக்குரிய பாதையில் செல்லட்டும். இடையி டையே நான் கொஞ்சம் விளையாடுவேன். அதிலொரு இன்பம்! பொழுது போகாதே!!" என அலுத்துக்கொண்டான் இறைவன்.

நிசப்தம்.

சிறுவர் சிந்தனைக்கு

# திருவைந்தெழுத்தின் மகிமை

புலவர் சி.விசாலாட்சி

முன்னொரு காலத்தில் தசாருகன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் சிறந்த வீரன். மாட்சிமையுடையவன். வீரகண்டை அணிந்த கால்கமா யுடையவன். பகைவரையும் இமைப் பொழுதில் வெல்லும் வேங்கை போன்றவன். இத்தகைய வீரத்தன்மை யுடைய அரசன் ஓர் அழகிய அரசிளங் குமாரியைத் திருமணம் செய்தான். அவ் வரசிளங் குமாரி கற்பிலும் தெய்வ பக்தியிலும் மிகவும் மேம்பட்டவள். சிவ பக்தியில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றிக் காணப்பட்டாள்.

உலகின் முழுப் பொருளாகிய எம்பெருமானை, வேதங்கள் ஐயா வென வோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனை, இமைப்பொழுதும் மறவாதவளாகிய அவ் வரசி, பஞ்சாட்சர மந்திரத்தைத் திரிகரண சுத்தியோடு குருவிடம் பெற்றாள். எம்பெருமானின் தாமரைமலர் போன்ற திருவடிகளைத் தன் இருதயமாகிய தாமரைமலரில் பதித்துப் பஞ்சாட்சர மந்திரமாகிய திருவைந்தெழுத்து மந்திரத்தைத் தியானம் செய்தாள். நாம ஜெபம் அல்லும் பகலும் அனுவரதமும் செய்து வந்தாள். இதனால் அரசி தன் கணவனை விட விஞ்சிய தவம் உடையவளானாள்.

ஒருநாள் அரசன் தனது பத்தினியாகிய அரசியைத் தீண்ட அவளை அணுகினான். அவ் வரச கன்னிகை அப்பால் விலகினாள். "அரசனே! மனது வேறாகிய பெண்களும், வியாதியினால் வருந்திய மாதர்களும், உள்ளத்தில் விருப்பமில்லாத பெண்களும் விரதம், கொண்டிருக்கும் பெண்களும், வயிற்றிற் கருப்பமுள்ள மாதர்களும் தீண்டி அணைக்கத் தகாதவர்கள். அதனால் தாங்கள் விருப்ப மில்லாத எம்மை நீக்கி, விருப்பமுடைய மாதரைத் தழுவி இன்பம் அனுபவியுங்கள் என்று கூறினாள்.

ஆனால் அரசன் அரசியின் அழகில் மயங்கி மட்டற்ற காமுகனானான். அவனுடைய காமம் அவனின் மதியையும் மனைவி கூறிய புத்தி மதிகளையும் ஏற்க மறுத்தது. எனவே அவளை பலாத்காரமாகத் த[illegible] வினான். என்ன ஆச்சரியம்! பஞ்சாட்சரமந்திரத்தை அல்லும் பகலு[illegible]

நின்றும் இருந்தும் கிடந்தும் தியானித்தும் ஜெபமும் செய்த அரசியினுடைய தேகத்தில் இருந்து எழுந்த சிவாக்கினிப் பிழம்பானது அரசனது கழுத்தில் இருந்த நறுமணம் பொருந்திய குளிர்ச்சியான மலர் மாலையைக் கருக்கியது. அவன் மார்பிலே பூசியிருந்த நறுமணம் கமழும் சந்தனக் குழம்பைச் சாம்பராக்கியது அவனுடைய ஆபரணங்களைக் கருமையாக்கியது அதுமட்டுமா அவனுடைய உடம்பையும் அவ்வக்கினி சுட்டது.

அரசன் உடனே விலகினன்; அஞ்சினன்; வருந்தினன். இவ்வாறு நிகழ்வதன் காரணத்தைக் கூறுமாறு துணைவியிடம் விநயமாகவும் பய பக்தியோடும் கேட்டான்.

அரசே! பிறவியைத் தருகின்ற ஆணவ மல இருளானது கெட்டு இறையருளைத் தருகின்ற பஞ்சாட்சர மந்திரத்தைத் துருவாச முனிவர் எனக்கு உபதேசித்தார். அதனை இடைவிடாது செபித்தும், இதய மலரில் இறைவனின் செந்தாமரை போன்ற பாதார விந்தங்களை நன்கு பதித்துப் பஞ்சாட்சர மந்திரத்தைத் தியானித்து வந்தமையால் எனது உடல் புனிதமாகித் தெய்வத் தன்மை யானது எனவே புண்ணியமானது பாவத்தைச் சேராது இது நிச்சயம் என்று கூறினள்'

பின்னரும் தனது கணவனைப் பார்த்து ''தெய்வத் தன்மையும் புனிதமும் உடைய இவ்வுடம்பு, பஞ்சாட்சரமாகிய திருவைந்தெழுத்தின் உண்மை அறியாமலும், அதனைத் தியானித்துச் செபிக்காமலும் இருக்கின்ற குளிர்ச்சி பொருந்திய உங்களுடைய திருமேனியைப் பொசுக்கியது. ஆகையால் நீங்கள் தக்க குருவிடம் பஞ்சாட்சர மந்திர உபதேசம் பெறுங்கள்'' என்று கூறினள்.

அதன் பின்னர் அரசனும் அரசியும் யமுனைக் கரையில் தவம் செய்து கொண்டிருந்த கர்க்கி முனிவரை அடைந்து, அவருடைய திருவடிகளை வணங்கி ''சுவாமி பாவியாகிய அடியேன் ஆணவ முனைப்பினல் பெருகுகின்ற பிறவிகளின் தளையில் இருந்து விடுபடத் தாங்கள் அடியேன் மீது கருணைகூர்ந்து பஞ்சாட்சர மாகிய திருவைந்தெழுத்தை உபதேசம் செய்ய வேண்டுமென வேண்டினன்.

கர்க்கி முனிவர் அரசன் மீது பேரிரக்கமும் கருணையுங் கொண்டார். அவ் வரசனின் தலையின் மீது தனது திருக்கரங்களை வைத்து ஆசியும் வாழ்த்தும் கூறியபின்,, இறைவனின் திருவருளைச் சுரக்கின்ற பஞ்சாட்சர மாகிய திருவைந்தெழுத்து மந்திரத்தை அரசனின் காதுகளில் உபதேசம் செய்தார்,

அந்தளவில் அவ்வரசனுடைய உடம்பில் இருந்த அனவற்ற உரோமங்களின் துவாரங்கள் வழியாக எண்ணற்ற கரியகாகங்கள் வெளியே பறந்து சாம்பராயின.

இதனைக் கண்ட அரசன் ஆச்சரியமும் அதிசயமும் அடைந்தான். "இவ்வாறு இக் காகங்கள் என்னுடம்பிலிருந்து வெளியே பறந்து வந்து சாம்பராக யாது காரணம்" என்று முனி புங்கவரின் பாதார விந்தங்களைப் பணிந்து கேட்டான்.

முனிவரின் இருகண்களிலும் கருணைப் பிரவாகம் பெருக்கெடுத்தன. முகத்தில் திருவருட்சோதி சுடர்விட்டது. பேச்சில் இன்சுவை பொருந்திய திருவருள் பொங்கி வடிய "அரசனே நல்வினை தீவினை என்பவற்றைச் செய்து பல பிறவிகளை எடுத்த போதிலும் சஞ்சிதம் என்னும் வினை பிறவி தோறும் தொடர்ந்து கொண்டே இருக்கும். அத் தொடர்ச்சி வினையானது, இத்திரு வைந்தெழுத்தின் உபதேச மகிமையால் அற்று விட்டது. இனிமேல் பாவம் பழிகள் தொடராத படி அவ்வினைத் தொடர்ச்சிகள் கரிய காகங்களாகிச் சாம்பராகி விட்டன. அதனால் இன்று நீ புனிதனாகி விட்டாய்" என்று கூறினார்.

இதன் பின்னர் அரசனும் துணைவியும் முனிவரை வணங்கித் தம் நகரை அடைந்தனர். பஞ்சாட்சர மகிமையை நாடெங்கும் பரப்பி நீதி நெறி வழுவாது செங்கோல் செலுத்தி இனிதே வாழ்ந்தனர்.

பஞ்சாட்சரம் பக்தரைக் காக்கும் படைகளாகும்.

---

இயம்பினர் ஒரு பால்......!

பயப்பிடாதீர்கள் வேண்டியதைத் தருகிறேன் என்று அபயமொடு வரதமாய்க் கைகளைக் காட்டியவன் நமது சிவபெருமானே. பயப்பிடாமலும் நியாயமான வேண்டுதல் இடைக்குமென்ற நம்பிக்கையோடும் நாம் வழிபட்டுக் கொண்டேயிருக்க வேண்டும். அவன் தருவது நமக்குக் கிடைக்காமைக்கு நமது தீவினைகளே காரணம் என்பதும்; செய்த தீவினைகளைக் களைவதற்கும் நல்வினைகளை விளைவிக்கவும் இந்த மனிதப் பிறவியைப் பயன்படுத்த வேண்டும் என்ற சிந்தனையும் நமக்குள் எழுவதற்கு சிவனருள் சித்திக்க வேண்டுமானால் கூடுதல் அன்பினில் கும்பிடும் பழக்கம் வழக்கமாக வேண்டும்.

புத்தூர் சிவன் கோயிலில்
ஆலயமணி ஆசிரியர்

---

முச்சந்தி முனையிலே......!

உங்களுக்கு வேண்டிய

★ உணவுப்பொருட்கள்

★ மிதிவண்டிப் பொருட்கள்

★ சாய்ப்புச் சாமான்கள்

அத்தனையும் கிடைக்கும்

ஒரே இடம்

# சோபஞஸ்

குறிகாட்டுவான் இருபிட்டிச்சந்தி

புங்குடுதீவு.

# கச்சியப்பரும் கல்மலையும்

— அகளங்கன்

கந்த புராணத்தில் ஒரு காட்சி. கச்சியப்பரின் கவிதா சாமர்த்தியத்திற்கு அது ஒரு சாட்சி. ஆம் அதில் தான் எத்தனை மாட்சி.

கந்தபுராணம் தேவகாண்டத்தில் தெய்வயானை அம்மன் திருமணப் படலத்தில் ஒரு நிகழ்ச்சி. தெய்வயானை அம்மனை நன்ருக அலங்கரித்து மணமேடைக்கு அழைத்துவருகின்றனர்.

திருப்பரங்குன்றத்து மலையிலே தன் பஞ்சினும் மெல்லிய பாதங்கள் நோவ நடந்து வருகின்ருர் அம்மையார்.

அந்தக் காட்சியை அகக் கண்ணுல் காண்கிருர் கச்சியப்பர். மணக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்தவர் கல்மலையில் தெய்வயானை அம்மையாரின் பாதங்கள் படுவதைக் கண்டு பதறுகிருர்.

தான் கண்ட காட்சியைப் பாடவேண்டும் என்ற நிலை அவருக்கு. அம்மையாரின் பாதங்கள் கல்மலையில் நடக்கும் கொடுமையைப்பாட கச்சியப்பரால் முடியவில்லை. இருதயமே வெடித்துவிடும் போல் இருக்கிறது. ஆனுல் அக்காட்சியும் பாடப்படவேண்டுமே.

அம்மையாரின் பாதங்கள் கல்மலையில் நடக்கும் கொடுமையை விடக் கொடுமையான வேருெரு நிகழ்ச்சியைக் கூறினுல் முன்னைய நிகழ்ச்சி சிறிதாகிவிடுமல்லவா.

ஆனுல் அதையே பாடமுடியாது பதறுபவர் அதைவிடக் கொடுமையை எப்படிப் பாடுவார். அந்தக் கொடுமையிலும் தனக்கு மகிழ்ச்சி ஏற்படக் கூடிய கொடுமை இருந்து விட்டால் அவரது பிரச்சனையே சுகமாகி விடும்தானே.

அதனுல் அந்த உத்தியை மிக அழகாக வெகு நேர்த்தியாகப் பயன்படுத்துகிருர் கச்சியப்பர். தெய்வயானை அம்மன் நடந்த திருப்பரங் குன்றத்துக் கல்மலையிலும் கடுமையான, கொடுமையான கல்மலையை முதலில் சிந்திக்கிருர் கச்சியப்பர்.

ஆம். தனது இதயந்தான் அதைவிடக் கொடிய கல்மலை என்கிருர். அந்த இதயமாகிய கொடிய கல்மலேலையிலே, நடப்பவர் யார் தெரியுமா. முருகப் பெருமான்தான். முருகப் பெருமானின் பாதங்கள் தனது நெஞ்சமாகிய கல்மலையில் தினமும் நடந்து உலாவருகின்றனவாம்.

தனது இதயமாகிய கல்மலையில், முருகப் பெருமானின் பாதங்கள் உலாவரும்போது அவரது பாதங்கள் எவ்வளவு வேதனைப் பட்டிருக்கும். அதனோடு ஒப்பிடுகையில் தெய்வயானை அம்மையார் திருப்பரங்குன்றில் நடந்தபோது அவ்வளவு வேதனை இருந்திருக்காது என்று கூறி மனம் ஆறுகிறார்.

தெய்வயானை அம்மையார் திருப்பரங்குன்றில் நடந்தது முருகப் பெருமானை மணம் முடிக்க. அதனால் அந்த மகிழ்ச்சியில் கால்வலி அவருக்கு ஏற்பட்டிராது. ஆனால் முருகப் பெருமான் தனது இதயக் கல்மலையில் நடந்தது காரணம் எதுவும் இன்றியல்லவா. என்று நினைக்கிறார் கச்சியப்பர். அதனால் தெய்வயானை அம்மன் திருப்பரங் குன்றத்துக் கற்களிலே நடந்த செய்தியைக் கூறுவது இப்போது கஸ்டமானதாகவோ புதுமையானதாகவோ இல்லை கச்சியப்பருக்கு.

பஞ்சிதனின் மெல்லடி பனிப்ப வரையின்பால்
குஞ்சரி நடந்தசெயல் கூறுபு துமைத்தோ.
செஞ்சுடர் வைவேலுடைய செம்மலடி தீயேன்
நெஞ்சக அடுக்கலினும் நின்றுலவு மென்றால்

சொல்ல முடியாத ஒன்றை எவ்வளவு இலகுவாக, சொல்லி முடித்து விட்டார் கச்சியப்பர், முருகனின் பாதங்களில் தனது இதயக் கல்மலையில் நடந்ததால் ஏற்படும் வருத்தத்தை கச்சியப்பரால் இலகுவில் சொல்ல முடிகிறது. காரணம் தனது இதயத்திலே முருகப் பெருமான் உலாவுகின்றார் என்ற சிந்தனையில் ஏற்பட்ட மகிழ்ச்சிதான்.

ஒரு கொடுமையைச் சொல்ல முடியாமல் திணறியவர், அதை விடக் கொடுமையை, மகிழ்ச்சியாகச் சொல்லி முடித்து விட்ட பாங்கு சுவைத்து இன்புறத்தக்கது.

அமெரிக்காவில்

# கண்ணதாசனின்
## கடைசிச் சொற்பொழிவு

மதிப்பிற்குரிய டெட்ராய்ட் தமிழ் மன்றத் தலைவர் அவர்களே, அருமை நண்பர் வெங்கடேசுவரன் அவர்களே, நண்பர் ஒளவை நடராசன் அவர்களே, அருமை நண்பர் சேதுராமன் அவர்களே. பெரியோர்களே. தாய்மார்களே.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்கள் வெறும் உத்தியோக நிமித்தம் மட்டும் இங்கே வரவில்லை, அவர்கள் தங்கள் கலை கலாசாரத்தையும் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்பதனை அறியும் போது உண்மையிலேயே மனம் மகிழ்ச்சி அடைகிறது.

எங்கெங்கே தமிழர் வாழ்ந்தாலும், அங்கெல்லாம் கூடத் தமிழ் மொழியின் பெருமையைப் பரப்ப வேண்டுமென்ற உணர்வு அவனுக்கு இருக்கிறது.

தமிழ் அவ்வளவு அற்புதமான மொழி, காலம் கடந்தமொழி. எந்த ஒரு மொழிக்கும் எப்போது தோன்றிற்று என்கிற வரலாறு தெரியும்; தமிழ்மொழி ஒன்றிற்குத்தான் எப்போது தோன்றிற்று என்கிற வரலாறு தெரியாது.

தமிழ் மொழியினுடைய வரலாறு மிக உன்னதமான வரலாறாக இருந்திருக்கிறது. கம்பனுடைய காலத்தை 12க்குத் தள்ளுகிறார்கள். சில பேர் 9க்குத் தள்ளுகிறார்கள். எதுவாக இருந்தால் என்ன? தமிழ் நாட்டிலே இது போன்ற வரலாற்றுக் குழப்பம் உண்டு. தொல்காப்பியர் ஏழாயிரம் வருஷம் முன் இருந்தார் என்பான் ஒருவன். இருபதாயிரம் வருஷத்திற்கு முன் இருந்தார் என்பான் இன்னொருவன். எவன் அதிகம் சொல்கிறானோ அவன் நல்ல தமிழன் என்று அர்த்

தம். (சிரிப்பு) அதனாலேயே கம்பன் காலம் எதுவாக இருந்தாலும் நம்முடைய தொல்காப்பியர் காலத்தை ஆரம்பகாலம் என்று வைத்துக் கொண்டாலும் பின்னாலே சங்க இலக்கியங்கள் திருக்குறள் சிலப்பதிகாரம், மணிமேகலை, பின்னர் பக்தி இலக்கியங்கள் பின்னர் பல்லவ கால இலக்கியங்கள் இப்படித் தொடர்ச்சியாக அந்தந்தக் காலங்களிலே எல்லாம் கவிஞருக்கும் புலவருக்கும் உலகத்தில் இருந்த மரியாதை கொஞ்ச நஞ்சமல்ல.

அந்தக் காலத்து ஒரு புலவனுக்கு அரசன் பணத்தைக் கையிலே அள்ளி அப்படியே கொடுத்தாராம். ஒரு முடிச்சு. அதை வாங்கப் போன புலவன், "அரசே உன்னுடைய கை மேலேயும், என்னுடைய கை கீழேயும் இருக்கக் கூடாது. நான் உலகத்துக்கெல்லாம் கூட அரசன். நீ இந்த நாட்டுக்குத்தான் அரசன். அதனாலே அந்தப் பணத்தை ஒரு தட்டிலே வைத்துக் கொள். நான் எடுத்துக் கொள்கிறேன்." என்றானாம். அரசன் அதே மாதிரி ஒரு தங்கத் தட்டில் புலவனுடைய தகுதிக்கேற்ப பணமுடிப்பை வைத்துக் கொடுத்தாராம். அவன் அதனை எடுத்துக் கொண்டான். அதனை எடுத்துக் கொண்ட பிற்பாடு புலவன் அரசனைப் பார்த்து "பணத்தட்டு உமக்கா. எமக்கா?" என்றானாம். பணத்தட்டு என்றால் பணம் இருந்த தட்டு என்று அர்த்தம். பண முடை என்றும் அர்த்தம் தமக்கு முடை வரக் கூடாது என்று அரசன். "உமக்கே", என்றானாம். புலவன் அந்தத் தங்கத் தட்டையும் தூக்கிக் கொண்டு போனானாம். (பலத்த சிரிப்பு) அவ்வளவு திமிர் பிடித்த காலம் இரண்டாம் நூற்றாண்டில் இருந்து பத்தாம்நூற்றாண்டு வரை இருந்தகாலம்.

அப்புறம் இந்தப் பத்தாம் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு சேர. சோழ பாண்டிய சாம்ராஜ்யங்கள் அஸ்தமித்து பல்லவ சாம்ராஜ்யம் அஸ்தமித்துப் போன பிற்பாடு புலவனை ஆதரிப்பார் இல்லாமல் போயிற்று. ஆதரிப்பார் இல்லாமல் போனது மாத்திரம் இல்லை. அவன் சின்னச் சின்ன சமஸ்தானத்துக்கு எல்லாம் போய், அந்தச் சேதுபதியைப் பார்த்து, உன்னுடைய நாடு எத்தனை பெரிது உன்னுடைய யானை எவ்வளவு! அங்கே யானை இருக்காது. (சிரிப்பு) உனக்கு இத்தனை யானைகள் உள்ளன; இத்தனை குதிரைகள் உள்ளன என்றெல்லாம் அந்தக் கிழவனைப் பார்த்து, அதற்குப் பிறகு இரண்டு மூட்டை அரிசி, இரண்டு வெள்ளாடு, கொஞ்சம் வாழைக்காய் இவற்றை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வருகிற காலமாக இருந்தது.

ஆக, சோற்றுக்குக் கஷ்டப்பட்ட புலவன்தான் பின்னால் வந்தான் சமஸ்தானதிபதிகளுக்குப் பிறகு உருது வந்து புகுந்தது.

முஸ்லிம்கள் வந்த பிற்பாடு உடனே பல வார்த்தைகள் மாறத் தொடங்கின. வஜா, கிஸ்தி, வக்காலத்து முச்சாலிக்க நமூனு நம்மு டைய ரெவின்யூ இலாக்கா பூராவையும் சீர்ப்படுத்திக் கொடுத்தவர் கள் அவர்கள் (சிரிப்பு) இப்போ டம்ளர் கொண்டா என்கிறோம். இந்த டம்ளர் எங்கேயிருந்து வந்தது? இப்படிப் பல வழக்குச் சொற் களைக் கவனித்தால், அந்த வார்த்தைகள் எல்லாம் அங்கே இருந்து தான் வந்தது. முஸாபரி பங்களா, டம்ளர் என்ற வார்த்தைகள் உருதுவில் இருந்து வந்தவை.

உருதுக் காரர்களைத் துரத்திக் கொண்டு வெள்ளைக்காரர்கள் வந் தார்கள். உடனேயே நாம் ஆங்கிலம் கற்க ஆரம்பித்தோம். ஆங்கில மும் உள்ளே வந்து, தமிழோடு சேர்ந்து கலந்து உள்ளேயே ஆங்கில மும் புகுந்து கொண்டது.

நாம் சாதாரணமாகப் பேசும்போது கூட ஆங்கில வார்த்தை களைக் கலந்து பேச ஆரம்பித்தோம். ''என்னுடைய ஒய்ஃப் ட்ரெயி னுக்குப் போனுள். ட்ரெயின்லே ஒரே க்ரவுட். நானும் கூட அப் டியே உள்ளே ஜம்ப்பண்ணி ஏறிவிட்டேன். உள்ளே பார்த்தால் ஒரே நாஸ்டி. இது என்ன கவர்மெண்டு? கொஞ்சம்கூடகிளீனு வச்சுக்க மாட்டேங்குறன். அப்புறம் ட்ரெயின் ஸ்டார்ட் ஆகிவிட்டது. நான் உடனே ஜம்ப் பண்ணிக் கீழே இறங்கி விட்டேன். இப்படி ஆங்கிலத் தைக் கலந்து பேசுவது ஒரு மரபாகிவிட்டது. (பலத்த சிரிப்பு) நாயைக் கண்டால் கூட 'கெட் அவுட் டாக்' என்று ஆங்கிலத்திலேயே பேசு வது வழக்கமாயிற்று. (சிரிப்பு). வெள்ளைக்காரர்களுடைய ஆதிக்கம் வந்தவுடனேயே ஆங்கிலம் படித்தால்தான் மரியாதை. தமிழுக்கு மரி யாதையே இல்லை என்று ஆகிப்போய் ஒரு நூற்றுண்டு ஒன்றரை நூற்றுண்டு காலம் தமிழுக்கு எந்தவிதமான மரியாதையும் கிடை யாது.

அவ்வளவு கேவலமாகத் தமிழ் போய், தமிழ் படித்தவனுக்கு இந்த நாட்டிலே மரியாதையே இல்லை என்று இருந்தபோது, தன் னுடைய இரண்டு கொம்புகளாலே, அதள விதள சுதள பாதாளத் தில் கிடந்த தமிழைக் குத்தித் தோண்டி எடுத்துப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றுண்டின் ஆரம்பத்திலும் அதை வெளியில் கொண்டு வந்து போட்டவர் மகாகவி பாரதியார். (பலத்த கைதட்டல்) முதன்முதலிலே தமிழுக்கு மறுமலர்ச்சி கொடுத் தவர். யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங் கும் காணேம்... செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தே -

வந்து பாயுது காதினிலே என்றெல்லாம் பாடிப் பாடிப் பாடி... அன்று கேட்காத செவிடர்களுக்கு முன்னாலே பாடி வைத்தார். இன்றைக்கு நாம் பாடி, கேட்கின்றவர்களுக்கு முன்னாலே சந்தோஷப்படுகிறோம். அவன் வந்து தமிழைத் தூக்கி வந்து மேலே போட்டபின் நாளாக நாளாகத் தமிழுக்கு இப்போதெல்லாம் ஒரு பெரிய மரியாதை கிடைத்து வருகிறது.

தமிழிலே என்ன இல்லை? உள்ளுக்குள்ளே புகுந்து பார்த்தால் கவிதைகளிலே ரொம்பச் சுகமான உவமைகள் எல்லாம் இருக்கின்றன. தமிழில் இருந்துதான் உவமைகள் ஷேக்ஸ்பியருக்கே போய் இருக்கிறது என்று ஆராய்ச்சி செய்கிறார்கள். தமிழில் இருப்பதைத் தெரிந்து கொண்டு தான் அவர் சொல்லியிருக்கிறார் என்கிறார்கள்.

'பொன்னினும் கள்வரை பொலிவு தூண்டுமானால்' என்று கம்பர் ஓரிடத்தில் சொல்வார். லட்சம் பொன்னை ஓரிடத்தில் வைத்து, ஓர் அழகான பெண்ணையும் படுக்க வைத்திருந்தால், திருட வருகிறவன் பொன்னைத் திருடமாட்டான். அந்தப் பெண்ணைத்தான் திருடுவான் என்பதாக 'பொன்னிலும் கள்வரைப் பொலிவு தூண்டுமானால்' என்கிறார் கம்பர், அதை அப்படியே இங்கிலீஷில் சொல்கிறார் ஷேக்ஸ்பியர். அதை ஒருவர் ஆராய்ச்சி செய்து இதிலிருந்துதான் அந்த உவமை அங்கே போயிருக்கிறது. அதனாலே கம்பன் தான் காலத்தில் முன்னோடி என்றார்; இப்படி ஏராளமான விஷயங்கள் இங்கிருந்து ஆங்கிலத்திற்குப் போயிருக்கிறது.

உவமைகளிலே தமிழன் மாதிரி அவ்வளவு அனுபவித்தவன் கிடையாது. மது - நிலா வெளிச்சம் கோப்பையிலே வைத்து அதைக் குடிக்கப் போகிறாள் ஒரு பெண். அப்படியே உள்ளே பார்க்கிறாள். இரண்டு வண்டு இருக்கிறது. 'சே, வண்டு விழுந்து விட்டது என்று கீழே கொட்டி விடுகிறாள் கீழே கொட்டினால் வண்டைக் காணோம். 'கீழே கொட்டும் போது வண்டைக் காணோமே, ஏன்?' என்று கேட்டால் அவள் உள்ளே பார்த்தபோது உள்ளே தெரிந்தது வண்டு இல்லையாம். அவளது கண்ணும்.

இப்படி உவமைகள் என்று வரும்போது தமிழிலே இருக்கிற மாதிரி வேர்ட்ஸ் ப்ளே இருக்கிறதே இப்படி வேறு எந்த மொழியிலேயும் விளையாட முடியாது. ஒரு வினைச் சொல்லை எடுத்தால் பெயர்ச்சொல்லாகும். (கவிஞர் இரும ஆரம்பித்தார்.) எனக்கு இருமல் வந்து கொண்டே இருக்கிறது. நேற்றே சொன்னேன். நாளைக்கு வந்துவிடக் கூடாது என்று. (கவிஞர் பலமுறை இருமினார். பேச்சு தடைப்பட்டது.)

இரண்டு அர்த்தம் என்பது தமிழில் ரொம்ப அதிகம். 96 புலவர் கள் கூட்டம் தருமபுரி மாவட்டத்திலே நடந்தது. 95 புலவன் வந்து விட்டான். ஒரே ஒரு புலவன் – கடைமடை என்ற ஊரிலே இருந்து வந்த புலவன் கடைசியாக வந்தான். உடனே மடாதிபதி அவரைப் பார்த்து, ''வாரும் கடைமடையரே,'' என்றார். கடைமடை என்ற ஊரைச் சேர்ந்தவரே என்று அர்த்தம். கடைசியாக வந்த மடையரே என்றும் அர்த்தம். (சிரிப்பு) மடாதிபதி அந்தப் புலவரைப் பார்த்து ''வாரும் கடைமடையரே'' என்றார். அவரும் இடுப்பில் துண்டைக் கட்டிக் கொண்டு, ''வணக்கம், மடத் தலைவரே'' என்று சொன்னார். (பலத்த சிரிப்பு.)

அந்த மாதிரி ஒரு கணவனுக்கு மனைவி உளுந்து வடை கொண்டு வந்து கொடுத்தாள். போன தீபாவளிக்குச் சுட்டது. (சிரிப்பு) அதைக் கொண்டு வந்து, 'இந்தாங்க,' என்று கொடுத்தாள். அவன் அதைக் கையில் எடுத்துப் புட்டான். இழுத்தான், திரும்ப ஒட்டினான். அவள் இட்டேயே கொடுத்தான். 'என்னங்க வடை ஊசி இருக்கா?' என்று கேட்டாள். 'ஊசி மட்டும் இல்லே, நூலும் இருக்கு, (பலத்த சிரிப்பு) தையலுக்கு உதவுமே,' என்று அவள் கையில் கொடுத்தான். ஊசியும் நூலும்தையலுக்கு உதவும், தையல் என்றால் பெண் 'உனக்கு உதவும்' என்று கொடுத்தான் என்றார்.

ஒரு புலவன் சாகக் கிடந்தான் செத்தாலும் குறும்பு போகாது புலவனுக்கு, அவன், சாகக் கிடக்கிற போது வைத்தியர் வந்து பார்த்து விட்டு, 'இவன் பிழைக்க மாட்டான் இனி, பாலைத் துணியிலே நனைத்து ட்ராப் ட்ராப்பாக விடுங்கள்.' என்றார். அதே மாதிரி அவன் பெண் கொடுத்தாள். கொடுத்தவுடனே புலவன் முகத்தைச் சுளித்தான். 'அப்பா, பால் கசக்கிறதா?' என்றாள். அவன் 'பால் கசக்கலே, துணியும் கசக்கலே' என்றானாம். (சிரிப்பு) துணி அவ்வளவு அழுக்காக இருக்கிறது.

அந்த மாதிரி தமிழில் எப்படிப் பேசினாலும் இரண்டு அர்த்தத்திலே பேசமுடியும். அதான் கோர்ட் மொழியைப் பற்றிச் சொன்னேன். கோர்ட்டிலே ஒரு சாட்சி வருகிறான். ''இவர் எனக்கு இருநூறு ரூபாய் கொடுக்கிறதாகச் சொன்னார்,'' என்றான். அவன் அதற்கு 'இல்லை, இருநூறு ரூபாய் தருகிறேன் என்றுதான் சொன்னேன்,'' என்றான் (சிரிப்பு) 'அட பாவி! முன்னூறு ரூபாய் தருகிறேன் என்று சொன்னியே, என்றான். அவன், 'முன், நூறு ரூபாய் தருகிறேன் என்று சொன்னேன்.' என்றான். அப்போது நானூறு ரூபாய் தருவதாகச் சொல்லவில்லையா?' என்று அவன் கேட்டான்; 'ஆமாம் 'நான் நூறு ரூபாய் தருவதாகச் சொன்னேன்,' என்றான் அவன். (பலத்த கைதட்டல் சிரிப்பு மாஜிஸ்திரேட் என்ன பண்ணுவான்?

நம்முடைய இலக்கியங்கள் மிகப்பெரியவை. ஆனால் ஒன்று தமிழ் அற்புதமான மொழி, அது சோறு போடாது. தமிழரோடு கூடப் பிறந்தது தரித்திரம். (சிரிப்பு). பெரிய சங்கடம் அதுதான். நான் ஒரு கோடியே ஒன்பது லட்சம் ரூபாய் சம்பாதிச்சு இருக்கிறேன். இங்கே அமெரிக்காவிலே அதைச்சொல்லலாம். இன்கம்டாக்ஸ் ஆபீஸர் வரமாட்டான். (சிரிப்பு) நான் ஒரு கோடியே ஒன்பது லட்சம் ரூபாய் சம்பாதிச்சிருக்கேன். பாட்டு மட்டும் எழுதி, காலணா மிஞ்சலே.

சீதேவியும் மூதேவியும் திருமால்கிட்டே போனாங்களாம். இரண்டு பொம்பளைங்க ஒன்னாச் சேர்ந்தால் பிரச்சினை என்ன? யார் அழகுன்னு இரண்டு பேருக்கும் பிரச்சினை வந்தது. நான் அழகா நீ அழகான்னு திருமாலையே போய் இரண்டு பேரும் கேட்டார்களாம். நான் அழகா அவள் அழகா?' என்று திருமால், 'நீங்கள் இரண்டு பேரும் நடந்து போங்கள், 'என்றாராம். நடந்து போனார்களாம். திரும்ப வாங்க என்றாராம் திரும்பி வந்தார்களாம். அவர் மூதேவியைப் பார்த்து. 'நீ போகையிலே நல்லாயிருக்கே என்று சொன்னாராம் (சிரிப்பு.) சீதேவியைப் பார்த்து, 'நீ வரும்போது நல்லா இருக்கே,' என்றாராம். (பலத்த சிரிப்பு) காம்ப்ரமைஸ் ஜட்ஜ்மெண்ட் இது. இதை அவளும் தப்பு சொல்ல முடியாது. எவ்வளவு விஷயங்கள் நம்முடைய பிலாசபியிலே இங்கே அமெரிக்காவிலே 'ஹரே கிருஷ்ணா' சத்தம் பல லட்சம் மக்களிடையே கேட்கிறது என்றால், அவ்வளவு இருக்கிறது.

ஒருவர் கேட்டாராம். ஒரு அமெரிக்கன் வந்து உங்களுடைய தத்துவத்தை இந்துயிசம் பேசுகின்றானே என்று ஒரு இந்து இந்தியாவைச் சேர்ந்தவர் கேட்டார். 'இந்து மதத்திலே இவ்வளவு தத்துவங்கள் இருக்கின்றன என்று எங்களுக்கு தெரியாது. உங்களுக்கு எப்படித் தெரியும்? என்று. அதற்கு அவர் சொன்னாராம் தாமரைப் பூ இருக்கிற குளத்திலேதான் தவளையும் இருக்கிறது. ஆனால் தாமரையில் தேன் இருக்கிறது என்பது தவளைக்குத் தெரியாது. எங்கோ இருக்கிற வண்டுக்குத்தான் அது தெரியுமே தவிர, (பலத்த சிரிப்பு) உங்களுக்குத் தெரியாது,'' என்றார். (கவிஞருக்கு தொடர்ந்து இருமல் தொல்லை கொடுக்க ஆரம்பித்தது.)

இப்படி தமிழனுக்கு ஒரு குணம் என்ன வென்றால் எவ்வளவுதான் அவனுடைய மொழியில் இருந்தாலும் அதன் மீது தன்னுடைய உறுதிப்பாட்டை அவன் நீண்ட காலமாகவே நிலை நாட்டவில்லை நாட்டியிருந்தால் இன்றைக்கு இந்தோனேசியா தமிழ் பேசும், தாய்லாந்து தமிழ் பேசும், கம்போடியா தமிழ் பேசும், இங்கே இருக்கிறவரெல்லாம் அமெரிக்கர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தால் அவர்கள் ஆங்கிலத்தைவிட தமிழ் பேச ஆசைப்படுவார்கள்.

'உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்,' என பாரதியினுடைய ஆசை இருக்கிறதே அது கொஞ்ச நஞ்சமல்ல! அவன் தான் முதல்லே அப்படிச் சொன்னான். தமிழை நிலை நாட்டியவனே பாரதிதான். கம்பனை எல்லாம் ஞாபகப் படுத்தியவனே பாரதிதான். பாரதிக்கு நூற்றாண்டு வருகிறது. இந்தத் தமிழ்ச் சங்கம் அந்த நூற்றாண்டு விழாவைக் கொண்டாட வேண்டும்.

இப்போது நேஷனல் இண்டெக்கிரேஷன் என்று பேசுகிறார்கள், கங்கையை இணைத்து சென்ட்ரல் இந்தியாவுக்குக் கொண்டுவர வேண்டும் என்கிறார்கள். வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிசையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம். என்றான் அன்றைக்கே பாரதி. என்ன இமாஜினேஷன்! (சிந்து நதியின்மிசை நிலவினிலே' என்ற பாடலை கவிஞர் பாடினார்.) தேசத்தை ஒரே இந்தியாவாக அவன் உற்று நோக்கினான். தோணிகள் ஓட்ட போட் விட சிந்து நதியை எடுத்தான். அதில்தான் போட் விட முடியும் அப்புறம் கங்கை. தமிழ் நாட்டு நதிகளை போட்டு அவன் சூஸ் பண்ணவில்லை, 'காவிரி தென் பெண்ணை பாலாறு. தமிழ் கண்டதோர் வையை பொருனை நதி' என்று சொன்னவன் இந்தத் தமிழ்நாட்டு நதிகளில் எதையுமே போட் விட அவன் சூஸ் பண்ணவில்லை, காவேரியிலே கர்நாடகக்காரன் விட்டான்னா மூன்று மாதம் தண்ணி, வைகையிலே கழுத்தளவு தண்ணி, தலைகீழா நின்னா போட் போகுமா? (சிரிப்பு)

அப்படி நதியின் பிழையன்று நறும் புனல் இன்மை. அமெரிக்காவிலே, கனடாவிலே உலகத்திலே கிடைக்கிற குடிதண்ணீரில் மூன்றில் ஒரு பகுதி தண்ணீர் இங்கே ஓடுகிறதால், அங்கே போய் விழுந்து சாகலாமா என்று தோன்றுகிறது. (சிரிப்பு)

பாஞ்சாலி சபதத்திலே பாஞ்சாலியைக் கூப்பிட்டு வந்து, அவளது ஆடையை உரியப் போறாங்க, 'கொஞ்சம் நில்,' என்று சொல்லிப் பஞ்சாலி கேட்கிறாள். 'என்ன?' என்றான். 'என்னை எப்போ வைத்து ஆடினார்?' என்றாள் 'முதல்லே நாட்டை வச்சான் அப்புறம் வீட்டை வச்சான். அடுத்து தம்பிகளையும் தன்னையும் வச்சான். அப்புறம் கடைசியிலே உன்னை வச்சான்.' என்றான். 'நாயகர்தான் தம்மைத் தோற்றபின், என்னை நல்கும் உரிமை அவர்க்கில்லை. அவன் தான் அடிமை ஆகிவிட்டானே? அப்புறம் என்னை வைக்க ரைட் அவனுக்கு எப்படி வந்தது என்று கேட்கிறாள். லீகல் ரைட் இன்றைக்கு இருக்கிற வக்கீல்களைப் போல அந்தப் பெரிய வக்கீல் (சிரிப்பு

வக்கீல்களைப் பற்றி ஒன்று சொல்வார்கள். பொய் சொன்னாலொழிய அவன் வக்கீல் தொழிலில் வாழமுடியாது. பொய் சொல்லத் தெரியாமல்தான் காந்தி கோர்ட்டிலே இருந்து ஓடி வந்து விட்டார்.

சுவர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடையே ஒரு தடவை நடுவில் இருந்த சுவர் விழுந்து விட்டதாம். சுவர் விழுந்தவுடனே, சொர்க்கத்திலே இருக்கிறவன் நரகத்தில் உள்ளவனைப் பார்த்து அதை நீ தான் கட்டித் தர வேண்டும். என்றானாம். அதற்கு நரகத்தில் உள்ளவன் சொன்னானாம், அது முடியாது. நீதான் கட்ட வேண்டும். என்றானாம். உடனே சொர்க்கத்தில் உள்ளவன் சொன்னானாம். அப்போ நான் கேஸ் போடுவேன். என்று. உன்னாலே முடியாது என்றானாம். அவன். ஏன்? என்றான் இவன், எல்லா வக்கில்களும் தான் இங்கே இருக்காங்களே?' (பலத்த சிரிப்பு) உன்னால் எப்படி கேஸ் போட முடியும்? என்றானாம். அந்த மாதிரி கறுப்புக் கோட்டு போடாத வக்கீல் மாதிரி ஆர்க்யூ பண்ணுகிறார் பாரதி.

பாரதி மிக அற்புதமான காலக் கண்ணாடி 89 வயதுதான். இவ்வளவு (கைக்குள் அடங்குவது) தான் அவன் புத்தகம், நான் ஏழுவால்யூம் எழுதியிருக்கிறேன். எல்லாவற்றையும் படித்துப் பார்க்கும் போது நான் பாரதிக்கு முன்னாலே எவ்வளவு தோற்றுப் போனேன் என்று நினைக்கிறேன். கொஞ்சம் எழுதினாலும் போதும், அளவிலே குறைவாக இருந்தாலும் அமுதம் அமுதம்தான். எவ்வளவு சோற்றைப் போட்டு தின்றாலும் ஒரு வைட்டமின் மாத்திரை ஆகுமா? உள்ளே போட்டவுடன் ஒரு எனர்ஜடிக்கா இருக்கிற மாதிரி அவ்வளவு அற்புதமாக பாரதி பாடியிருக்கிறான். தமிழகத்திலே நூற்றுக் கணக்கான கவிஞர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள் அற்புதமான கவிஞர்கள்.

யாழ்ப்பாணத்திலே இருந்து ஒரு கவிஞர் வந்தார். ஒரு சின்னப் புத்தகம் கொடுத்தார். அவருக்கு அண்ணாமலை யூனிவர்சிடியிலே பணம் கட்ட வேண்டும். கேட்டார் கொடுத்தேன். இதைப் படித்துப் பாருங்கள் என்று சொன்னார். தமிழ்விடு தூது நூல், ஒரு பெண் தமிழைத் தன் கணவனிடம் தூது விடுகிறாள். அவள் தன்னுடைய கணவனைப் பார்த்து. தமிழே நீ தூது செல், 'என்றாள். தமிழ், 'அவன் எப்படி இருப்பான்? என்று கேட்டதற்கு அவள் சொல்கிறாள். 'அவன் கட்டியிருக்கும் ஆடையிலே நெய்த நூலிலும் தைத்த நூல் அதிகம், என்றாள். அவ்வளவு வறுமை. நெசவு செய்த நூலைவிட, ஒட்டையைத் தையல் போட்ட நூல் அதிகம் என்றாளாம். அதுமாதிரி பாடிய அற்புதமான கவிஞர்கள் இருக்கிறார்கள். தமிழ் எப்போதுமே இப்படிப் பேசி ரசிப்பதற்குத்தான் லாயக்கு. தவத்திற்கு ஒருவரடி, தமிழுக்கு இருவரடி, சவத்திற்கு நால்வரடி என்றான்.

சிரிக்கிறது என்று சொன்னா, நீங்கள் எல்லாம் சிரிக்கிறீங்க, எனக்குச் சந்தோஷம். அழ வேண்டி வருகிறது என்றால் பெரிய கூட்டத்

திலே அழக் கூடாது. 'நடிக்கிறுன் பார்' என்பான் ஒருத்தன்ர 'கண்ணிலே தண்ணீர் வருதா, பாருடா!' என்பான் இன்னெருவன். இப்படிக் கிண்டல் எல்லாம் பண்ணுவார்கள். அழறது என்ருல் தனியாகப் படுத்து அழவேண்டும். சிரிக்கிறது என்ருல் கூட்டத்திலே உட்கார்ந்து சிரிக்கணும். தனியா உட்கார்ந்து சிரிக்கக் கூடாது. சிரித்தால்... (பலத்த சிரிப்பு)

இங்கே வர, 24 மணி நேரம் 23 மணி நேரம் ஏர் இந்தியாவிலே உட்கார்ந்து அலுத்துப் போய்விட்டது எனக்குக் குதித்து விடலாமா கீழே என்று ஆகிவிட்டது.

அப்படி எனக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தாலும், உள்ள நிலை பாதிக்கப்படவில்லை திரு. வெங்கடேசுவரன், மதன் ஆகியோர் அவ்வளவு சொல்லி, லெட்டர்கள் எல்லாம் எழுதினுர்கள். ஒரு மனிதன் அமெரிக்காவைப் பார்க்காமல் சாகக்கூடாது. ஏன் என்ருல் ஜனநாயகத்திலே இங்குதான் உச்சம் இனிமேல் வேறு எந்த நாடும் இதுபோல் வரப்போவதில்லை. டெமாக்ரசிக்காக வளர்ந்த கண்ட்ரி. அமெரிக்காவினுடைய ஜனநாயகம். (பலத்த கைதட்டல்) இங்கே சினிமாப் படத்தைப் பார்த்தால் கென்னடியையே கிண்டல் பண்ணுகிறுன். ஜனுதிபதியைக் கிண்டல் பண்ணுகிறுன். அதைப் பூரா அலவ் பண்ணுகிறுர்கள். நமது ஊரிலே லேசா ஒரு வார்த்தை சொன்னுல் அதை அப்படியே சென்சாரில் கட் பண்ணிடுவாங்க. (சிரிப்பு) இங்கே சென்ஸார் அப்படியே விட்டு விடுகிறுர்கள் இதைப் பார்த்தா கெட்டுப் போறுங்க? அவன் ஏற்கனவே கெட்டுப் போனவன் தானே? (சிரிப்பு.

அங்கே சென்ஸார்காரன் என்ன பண்ணுகிறுன்? அவன் மட்டும் பார்க்கிறுன் பாருங்கள். (பலத்த சிரிப்பு.) அதனுலே மற்றவன் பார்க்கக் கூடாது. (பலத்த சிரிப்பு.) 'என்ன ரொம்ப ஆபாசமா இருக்கே எங்கே போடு இன்னெரு தபா,' என்று அப்படி கேட்டுக் கேட்டு மூன்று தடவை பார்க்கிறுன். (பலத்த கைதட்டல் சிரிப்பு.)

அமெரிக்காவைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு இருந்தது ரொம்ப நாட்களாக. சில வாரங்கள் இங்கே இருந்து உங்களை எல்லாம் கண்டு அளவளாவி, போவதிலே நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். அமெரிக்காவிலே உள்ள தமிழர்கள் வசதியாகவும் இருக்கிறுர்கள். ஆரோக்கியமாகவும் இருக்கிறுர்கள் என்பதைக் கேட்கும்போது நல்லா இருக்கு. உங்கள் வாழ்க்கை பத்திரமாக இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. அது இன்னமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும்.

—நன்றி—
'குமுதம்'
14-1-88ல்

கவியரங்கத்தலைமையிலே......!

# சிலப்பதிகாரக் கவிதை விருந்து

கலைஞர் மு.கருணாநிதி

வணக்கம்

வண்ணத் தமிழ் வடிவம் எங்கள் நாவலர்க்கும்
எண்ணக் கருவூலம் இனிய பேராசிரியர்க்கும்
கண்ணப்பன், மன்னை, சாதிக் அமைச்சருக்கும்,
அண்ணன் வழிவந்த அனைவர்க்கும் வணக்கம்.
சிலம்பொலிக்கும் சிவஞானச் செல்வர்க்கும்.
செந்தமிழ்ப் பழஞானக் கணேச நல்லார்க்கும்,
சிரம் தாழ்ந்த வணக்கம்!
சீரழிந்த பூம்புகாரைச்
செம்மையுறச் செய்யும் பணி
ஆர்வமுடன் நடப்பதற்கு
அழைப்பேற்று வந்துள்ள
அன்புள்ளம் அத்தனைக்கும் அடியேனின் வணக்கம்.
சிலப்பதிகார விருந்து ஒன்றைத் தருவதற்குச்
சீலமிகு தமிழெடுத்து வந்துள்ள கவி நெஞ்சங்கட்கு
என் கனிவான வணக்கம்!
அருந்தமிழே! அமுதே!
நறுமலர் மணமே! தேனே!
அன்னையாய் வந்தென்னை ஆட்கொண்டவளே!
அண்ணனாய் வந்தென்னை ஆளாக்கியவளே!
காஞ்சி அண்ணன் கால்மலர் தொழுது
கவி ரங்கம் தொடங்குகின்றேன்.

வாழ்ந்திடம்மா
தமிழர்கள் வாழ,
தமிழ் நிலம் வாழ!

குடகுமலை உச்சியிலே கோலங்காட்டி
அழகுமகள் காவிரியும் ஆடவந்தாள்
ஆடவந்த ஆரணங்கை அடைவதற்கு
ஓடிவந்த கர்நாடகத்தான் ''அணை'' என்றான் - அவன்

கையணையைத் தாண்டிக் கல்லணைக்குள் நுழைந்து, - தன்
கற்புநெறி காப்பதற்குத் தஞ்சைக்குத் தாவி வந்தாள்.
பூம்பாவை காவிரியின் புகார் கேட்டுச் சோழ மன்னன்
பூம்புகாரின் கடல் அலையைக் கணவனாய் ஆக்கிக் காத்தான்!
பிறந்த வீட்டை மறந்திடாமல் - என்றும்
புகுந்த வீட்டு வளம் பெருக வாழ்வதுதான்
பெண்மணிக்குப் பெருமை யென்றால் - நம்
கண்மணியாம் காவிரிக்கும் அது பொருத்தம்தானே

இவ்வாறு,

காவிரி புகுந்த பட்டினம் தான்,
காவிரி புகு பட்டினமாய்த் திரிந்து நின்று
காவிரிப்பூம் பட்டினமாய் மாறிற் றென்பேன்.
கரிகாலன் பெருவளத்தான் திருமாவளவன்
கனிவுமிகு நட்புக்கு அவன் உறையும் வாளாம்
கயமைமிகு பகைமைக்கோ உறைவிட்டெழுந்த வாளாம்.
உறையூரைத் தலைநகராய்க் கொண்டு - பின்னும்
ஒரு ஊரை மணந்து கொண்டான் தலைநகராய், அந்த -
இரு தார மணத்தானுக்கு வாய்த்த இளையவளே
இனியவளாய் இங்குநமை வரவேற்கும் பூம்புகாராம்.
"நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்" - எனப்
பட்டினப்பாலை முழங்குகின்ற துறைமுகப்
பட்டினமாய் விளங்கிற்றந்நாள்!
மருவூர்ப்பாக்கம் உண்டு ஆங்கு மறங்கெழுவீரர் உண்டு.
மருவு பெண்ணாசையால் மயங்குகிற
மாநகர நம்பியர்கள் நடமாடும் பகுதியுண்டு.
நாளங்காடி உண்டு - அங்குப் பிற
நாட்டார்கள் நாள்தோறும் வருதல் உண்டு.
அரச வீதி, ஆடும் கொடித் தேர் வீதி,
வாணிகர் வீதி, வாய்மை நிறை வேளாளர் வாழும் வீதி.
மருத்துவர், சோதிடர், மாகதர், கூத்தர்,
மண்டிக்கிடக்கும் யானைகுதிரை சூழும் வீதி
சித்திரப் பாக்கமெனச் செப்பும் - சீர்மலி
பட்டினப் பாக்கமாய்த் திகழ்ந்த தந்நாள்.

வடநாட்டுப் படையெடுப்பில் சோழன் பெற்ற
புகழ்நாட்டும் பட்டி மன்றம், முத்துப்பந்தர்,
தோரண வாயில் - எனத் தொல் புவியில் தமிழன் - வெற்றி

நிலை நாட்டும் நெடுங்கல் மன்றம், இலஞ்சிமன்றம்,
கலைநாட்டம் கொண்டோரைக் கவர்ந்திழுக்கும் பாவை மன்றம்,
முருகன் கோட்டம், அதனருகே புத்தர் கோட்டம்,
முத்தமிழ் ஒலிக்கும் கோட்டம் நாள்தோறும்
சித்திரைத் திருநாள் கூட்டம்!
இதையெல்லாம் சித்தரிக்கும்
இளங்கோவின் குணவாயிற் கோட்டம்;
எல்லாமே அழிந்த தம்மா கடலாலும் காலத்தாலும்!
என்றாலும் சேரன் தந்த சிலம்புச் செல்வம்
அழியாத கருவூலம் - அணையாத திருவிளக்கு.

அந்த,
விளக்கொளியில் விழிப்புற்று
மறக்கவொண்ணு மொழிப்பற்றால்
விளைந்தது தான் புதிய புகார் — வெறும்
வீணர்கள் தினம்எழுப்புகின்ற புகார் அல்ல.
வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ்செய்கின்ற தமிழ் மூச்சால்
பொங்கிப் படைத்த புதிய புகார் — பூம்புகார்.
மனை விளக்குக் கண்ணகிக்கும்
மாதரசு மாதவிக்கும்
பணைவைர மார்பன் கரிகாற் சோழனுக்கும்
பாவரசு இளங்கோவின் பண்பார்ந்த சிலம்புக்கும்
எழிலார்ந்த புத்துருவம் கொடுக்கச் செய்ய
எனைப் பெற்ற தமிழுக்கும், என் தாய்தந்தை
இருவர்க்கும் எவ்வாறு நன்றி சொல்வேன்?

நமக்கு,
சிறப்பதிகாரம் பலவற்றை உரிமையாக்கத் — தன்னாட்சி கோரி
இறப்பு வரினும் அதனை உவந்தேற்போம் என்றும், — பதவித்
துறப்பு வரினும் பொருட்படுத்தோம் என்றும், - இந்தச்
சிலப்பதிகாரம் அன்றோ உணர்வூட்டல் கண்டோம்.
வஞ்சகர் வந்தார் தமிழால் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தார் நம் வரலாற்றை அழித்தார்

இன்று,
கொஞ்சு கின்ற சிலம்பன்றோ நம் சரித்திரத்தைக்
கொஞ்சமேனும் காட்டுகின்ற கோபுரத்துத் தீபம்;
''சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஒரு பாட்டுடைச் செய்யுள்என
முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது.

அடிகள் நீரே அருளுக'' என்றிட
எழுந்த காப்பியம் எழுச்சிக் காப்பியம்! – அந்த
இலக்கியத்தில் விருந்தொன்றை அளிப்பதற்கு
இணையற்ற கவிஞர் எண்மர் இங்குள்ளார்
''நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப''
இலக்கணக் கிழவர் இயம்பிய வழியில்
எட்டுச் சுவை இங்கே படைப்பர்!

நகை அழுகை இழிவு வியப்பு
அச்சம் வீரம் வெகுளி உவகை எனப்
பகை நோக்கமின்றிப் பாடுகின்ற போட்டி.

அழுகையினால் நகை கேட்டு அடையக் கூடும்
அச்சத்தால் அடங்குகின்ற அத்தானை மணந்து விட்டால்!
இழிவு வந்தும் வெகுளாதார் நிலை கண்டு
வீரர்க்கு நெஞ்சில் வியப்புத் தோன்றும்.
உவகையும் அழுகையும் ஒரு தாய் மக்கள்,
ஒருவரை ஒருவர் நிழல்போல் தொடர்வர்!
இந்த,
எட்டுச் சுவை
பிட்டுத் தமிழ்
கட்டித் தயிர்
வட்டில் நிறை
கொட்டித் தர
பட்டுக் கொடி
கொற்றக்குடை
முத்துச்சரச்
சோழனூர் வருவீரரே!
சுவை விளக்கம் தருவீரே!
என அழைத்தோம், எண்மர் இதோ வந்துள்ளார்!
எட்டெழுத்துச் ''சிலப்பதிகாரம்'' இயற்றியவர் – சுவை
எட்டெடுத்துச் சேர்க்காமல் விடுவாரோ?
''எண்ணும் எழுத்தும் இயல் ஐந்தும் பண் நான்கும்
பண்ணின்ற கூத்துப் பதினொன்றும் - மண்ணின் மேற்
போக்கிய பூம்புகார்ப் பொற்றொடி மாதவி தன்னோடு
அணைவுறு வைகலின் அயர்ந்து மயங்கி,
விடுத லறியா விருப்பினனாகிய கோவலன்''
கெடுதலறியாக் கண்ணகியுடன் பகிர்ந்த இன்பம் கணக்கிலது!

தும்பை மலர்க் கண்ணகியும் கோவலனும்
"தூமப் பணிகளொன்றித் தோய்ந்தாலென வொருவார்
காமர் மனைவியெனக் கை கலந்து – நாமந்
தொலையாத இன்ப மெலாம் துன்னினர் – மண்மேல்
நிலையாமை கண்டவர் போல் நின்று......"
உவகையில் மட்டுமல்ல;
அழுகையிலும் - கோவலன் தாள் பற்றித்
தொழுகையிலும் மாதவி, கண்ணகி பாத்திரங்கள் போட்டி போடும்!

காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்முடன் கூடி
அருந்தமிழாற்றல் அறிந்திலராகிச்
செப்பிய மொழிகளைச் சேரன் கேட்டு,
கொட்டுக முரசெனக் கூறிய சொல்லும்
கொடியவர் முடித்தலை ஏறிய கல்லும்
வீரச்சுவை விளக்குகிற காட்சி - தமிழன்
வெற்றிக் கொடி பறக்க விட்ட மாட்சி!

தித்திக்கும் தேன்பாகைத் தெவிட்டாத தெள்ளமுதக் கோவலனை
எத்திக்கும் புகழ் பாண்டியனோ திருடனுக்கிக் கொன்றுவிட,
தீச்சுழலாய்ப் பெருகி வந்த கண்ணகியோ;
தீர்ப்பளித்த மன்னவனைத் தலைகுனிய வைப்பதற்குச்
சிலம்பெடுத்து உடைத்தபோது - தன்
எலும்பெடுத்து உடைத்தது போல் வியப்புற்றான் மதுரை வேந்தன்!

உடன் வீழ்ந்திறந்தான்!

நீதி வழுவா நெறிமுறைப் பாண்டியன் நான்! - அந்த
நெடுஞ்செழிய மன்னவனா நீதி தவறிவிட்டேன்?
என்ற கேள்வியில் தான் எத்துணை வியப்பு?

எத்துணை பதைப்பு?

வியப்புறுதல், நகைத்தல், அழுதல், வெகுளல்,
வீரம், இழிவு, அச்சம், உவகை என்னும்
எட்டுவகைச் சுவையினிலே எதிலும்
ஒட்டுறவு இல்லாத பிறவிகளும் உலகிலுண்டு.

இடிமுழக்கம் கேட்பது போல் அரங்கில்
வெடிச் சிரிப்பு நகைச் சுவையைக் கலைவாணர்

படித்தவர்க்கும் பாமரர்க்கும் வழங்கும் போதும்
இடித்து வைத்த புளிபோல் சிலபேர்

இளித்திடவும் விரும்பாமல் இருப்பதுண்டு!

அடுக்கடுக்காய்ச் சிறைவாசம்
அடக்குமுறை வனவாசம் என்றே
அருமைமிகு கொள்கைக்குத் தியாகம் ஏற்ற
பெருமைமிகு தலைவர்களும் மறைந்துவிட்டார்!
அழுகை நின்ற அகத்தினராய் முகத்தினராய்
ஆயிரம் பதினாயிரம் லட்சமென மக்கள் கூட்டம்
இடுகாட்டுப் பொட்டலிலே ஏங்கி நிற்கும் —
இறந்தவர்க்கு இறுதிவணக்கம் செய்வதற்கு:- அப்போது
கோமாளிக் கூத்தாடும் ஓர் மனிதன் அங்குவந்தால்
ஏமாளிக் கூட்டமொன்று கூச்சல் போடும் —
கைதட்டு — ஆரவாரம் களிப்புக்கூத்து — நம்
காதுகளும் கண்களும் தானாக மூடிக்கொள்ளும்!
அழுகைக்கும் உவகைக்கும் இடம் பொருள் தெரியாதோர்
கழுதைக்கும் கீழானோர் எனச் சொல்வேன்!

நாற்றிரண்டு மெய்ப்பாடாம் சுவை பிரித்து - பழ
நூற்புலவர் தொல்காப்பியர் கருத்து நெய்தார்!
அவற்றில் தலையான எண்சுவையும் கிளையான பல்சுவையும்
கவிநயத்தில் காட்டுதற்கு இங்கே கவிஞருண்டு.
அவிநயத்தில் காட்டுதற்கும் அணங்கு உண்டு.
ஆனாலும் சில பெண்கள் ஆட்டம் கண்டால் - நம்
வாணாளில் பெரும்பாவம் செய்தோர் ஆவோம்!
தீப்போலத் தகிக்கின்ற காமத்துக்கும்,
தேள்போலக் கொட்டுகின்ற கோபத்துக்கும்,
சினங்கொண்ட நாகமெனச் சீறுகின்ற "பாவ" த்துக்கும்
செம்மாதுளைக் கன்னங்கள் குவிக்கின்ற நாணத்துக்கும்
சிறிதளவு வேறுபாடும் ஏற்றத்தாழ்வும் இருப்பதில்லை.
அரிதாரப் பூச்சு முகத் தசைவிலோர் அசைவுமில்லை.
அங்கங்களின் சேட்டையன்றித் தங்கமகள் சிலைமுகத்தில்
அணுவளவு மாற்றமேனும் அவிநயத்தால் கண்டதுண்டோ?

'திமி திமி' என ஆடுகின்றார் — அவை அதிர
'மிதி மிதி' எனச் சேறு மிதிக்கின்றார்
அவரெல்லாம் தொடர்ந்து ஆடிவந்தால் - குட்டிச்
சுவராகும் நடன மேடை! கொலையாகும் கலை என்பேன்.

இறுதியிலே 'உவகை' வைத்து எட்டு வகை மெய்ப்பாட்டை
அறுதியிட்டு மாலை செய்தார் காப்பியனார்—இன்றோ
உவகையுடன் தொடங்கிடுவோம் கவியரங்கம்!
உறுதி மிகு வீரத்தைக் கடையில் கேட்போம்
கடைச் சரக்கா வீரமெனக்
கண்மணியே கேட்காதே சில
கட்சித் தலைவர்க்கு — விலை கேட்கும்
பொருளாய்த் தான் போயிற்று வீரம்!
போர் என்றால் நான் முந்தி நீ முந்தி
எனும் கூட்டம் நம் கூட்டம்—அக்கப்
போர்ப் பேர் வழிகள் கூட்டமல்ல; வைக்கம்
போர் வீரர் வழி வந்தவர் நாம்! வைக்கோல்
போர்—இந்தத் தீயுடனே விளையாடலாமா?
எதற்காக நல்லரங்கில் பிறர் நினைவு!

உவகையிலே தொடங்கி நம் கவியரங்கு
உலகு புகழ் வீரமுடன் முடியட்டும்!
கடையில் வீரம் கேட்கலாம் என நானிங்குக்
கழறியதின் விளக்கம் புரிகிறதா நன்கு?
இடையழகு மணிமேகலையில் காட்டி—சிலம்பில்
நடையழகு காட்டுகின்ற தமிழணங்கே!—இதோ, கவிஞர்
படை வரிசை கிளம்பிற்றம்மா — உனக்குப்
பா வரிசை வைப்பதற்கு—நடக்கட்டும்
கை வரிசை நானழைக்கின்றேன்—கவிஞர்களை

கவிஞர்களை அறிமுகப் படுத்தியது :

முதலில் வைரமுத்துக் கவிஞர் சிலம்புப்
பரலில் உவகை பற்றிப் பாடிடுவார்
உவகையைத் தொடர்ந்து அழுகை வரல் காண்பீர்!
உருவிலே பெருந்தேவன் வயதிலே இளந்தேவன்
சிலம்பிலே 'அழுகை' எனும் அமுதைச்
செந்தமிழில் அள்ளி அள்ளித் தருவார்.

அழுகை கண்டு நகைப்பவரும் உண்டு
அந்தக் கல்நெஞ்சுக் கவி கண்ணப்பன்
நகையோடு வருகின்றார்... கோவலன்போல்
சிலம்பென்னும் நகையோடு மதுரைக்கு வரவில்லை.
சிலம்பினிலே செழிக்கின்ற நகை காட்டப் பூம்புகார்க் கவியரங்
[கிற்கு வருகின்றார்.

வீணாக நகைப்பவர் மேல் வெகுளியால் பாய்ந்திடுவார் உண்டு.
சீராகக் கால்தூக்கி ஆடுகின்ற நடராசன் தில்லையிலே
இங்கு,
நேராகக் கவிதூக்கி வருகின்றார்
தி.கு. நடராசன் தமிழ்க் கொல்லையிலே...
வெகுளி பற்றி வெகுளாமல் பாடுமய்யா!

வெகுண்டவரைக் கண்டாலே அச்சம் வரும்
தகுந்தவரைக் கொண்டதனைப் போக்கிடவே
தமிழன்பக் கவிஞரை நாம் அழைத்துள்ளோம்.
அவை அச்சமின்றிச் சொல்லாடும் அருந்தமிழ்!
சுவைசொட்டும் மொழியாலே கவிதை பொழி!

'அஞ்சுவ தஞ்சல் அறிவார் தொழில்' எனினும்
வெஞ்சமர் முடுக்கிக் கொள்கையில் வென்றிட
அஞ்சுதல் தீதே! ஆண்மையும் இலதே!
அச்சம் வரின் ''இழிவு'' வருமென்று
ஆண்ட தமிழ் இனத்துக்கு
அறிவுறுத்த வருகின்றார் அப்துர் ரகுமான்.
அவர் பாடுகின்ற சுவை ''இழிவு''
ஆனால் அது தமிழ்ப் பொழிவு!
இழிவு வரின் இறப்பது தான் தமிழர் மாண்பு!
இது வந்தும் பலபேர் உயிரோடு இருப்பது பற்றி
வியக்கின்றார் குருவிக்கரம்பையார்.
குத்தூசி குருசாமியை பெற்றெடுத்த சிற்றூர்
முத்தான சண்முகத்தை நமக்களித்துத்
தமிழகத்தை வியப்பினிலே ஆழ்த்துதம்மா!

வீரம் பற்றிப் பாடுதற்கு—செயலில்
வீரம் காட்டும் கவிஞருண்டு—நெஞ்சில்
ஈரம் என்றும் எனக்குண்டு—இந்தப்
பொன்னிப் பயிரை வளர்ப்பதற்கே!
வளவன் வாழ்ந்த மாநகரில்—பொன்னி
வளவன் பாடும் கவி கேட்போம்.

முடிவுரை!

காலைமுதல் இந்தக் கவியரங்குவரை
கன்னல் நிகர் தமிழோசை கேட்டு

மகரந்தம் உண்டு மகிழ் வண்டாகக் கிடக்கின்றேன்.
மனம்பெற்ற 'ஓர் பொழுது நிம்மதி' யால் களிக்கின்றேன்.
முடிமன்னர் முதுபுலவர் வளர்த்த தமிழ்த்—தேனைப்
படிபடியாய்க் குடித்த பின்னர்
முடிவுரையும் கூறுதற்கு முடியுமோ என்றால்?
பூம்புகார் வந்தோரே!
புத்துணர்ச்சி பெற்றோரே!
சென்று வருக என வாழ்த்துதற்கு முன்
சித்திரை முழு நிலா இன்று கண்டிடுக—
முத்திரைப் பொன்னும் குழந்தைகட்கு
முத்தம் ஈந்திடுக கடற்கரையில்......
குழந்தைக்கு மட்டுந்தானா எனக் கேட்காதீர்......
மடந்தைக்கும் காளைக்கும் இடையிலுள்ள விவகாரம்

பூம்புகார் நிலாப் பார்த்திடுவீர் தமிழ்ப்
புவியாண்ட சோழ மன்னன் கொற்றக்குடை போல அது
இருப்பதையும் எண்ணிடுவீர் - நம்
இலட்சியத்தை எய்திடவே—சிலம்பு
இலக்கியத்தைச் சிந்தையிலே பதித்திடுவீர்......
அலைபாயும் கடலோரம் நிற்கும்போது
அண்ணவழி நடக்கின்ற அரசுக்கும்

வாழ்த்துச் சொல்வீர்!

வணக்கம்.

நன்றி: திருக்கோயில்

# கம்பன் கோட்டத்தில் நவராத்திரி நாட்கள்

கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை

நல்லூர் கந்தன் ஆலயமணியின் நாதம் நாற்றிசையும் ஒலிக்க சம்பூரண நித்திரையில் சுகித்த இவர் படுக்கையை விட்டு எழுகின்றனர். கோட்டத்தின் கோலம் தனிக் கோலம் கொள்ள வேண்டுமென்ற நினைவில் பலவேறு பணிகளைத் தொடங்குகின்றனர். அன்பன் ஜெயராஜ் குடுமியை முடிந்தபடி நண்பன் ரகுவுடன் புதுமணம் பரப்பும் மலர்கள் கொய்ய அருகே உள்ள வித்துவான் வேலனின் வீட்டுக்கு விரைகிறார். ரட்ணகுமார், சுரேந்திரன் கைவரிசை மண்டபத்துத் தளத்தினைத் தகதக வென தனி அழகு மிளிர வைக்கிறது. சுத்திகரிப்பு வேலையில் நாள் மலர்கள் கொண்டு வரப்பட்டதும் ரவியின் கைவண்ணத்தில் இரு மாலைகள் உருவாகின்றன. பார்த்துப் பரவசமடைகிறது ஒரு உள்ளம். அது வேறு யாருமல்ல. யாழ். இலக்கிய வட்ட செயலர் செம்பியன் செல்வன் தான். யாழ் இந்துக்கல்லூரி விழாபற்றி ஜெயராஜ் உடன் உரையாட வந்த செம்பியன், மறந்த நிலையில் கோட்டத்தில் நிலவும் தனித்துவத்தை மெச்சினர்.

இங்கே அடிக்கடி வந்து தங்கினுல் என்ன? என்ற எண்ணம் முளை விடுகிறதென்றார். நல்ல நிறுவனம்; நூல் பிரசுரிக்க வேண்டும்; நல்ல அறுவடை பெறவேண்டுமென வாழ்த்தினர். இதற்கிடையில் காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் சிவகுமார் தலைநீட்டுகிறார். காரைநகரில் நடைபெற இருக்கும் 'பட்டிமன்றம்' பற்றிப் பேச்சு திரும்புகிறது. நவராத்திரி முதல் நாள் அதிகாலை முதல் ஒன்பது மணிவரை நிகழ்ந்தவை இவை.

அமைதியான ஒரு ஆச்சிரமம் போல அமைந்துள்ள கம்பன் கோட்டத்தில் புனிதமான சிந்தனைச் சிதறல்களை, நற்கருமங்களை நாளாந்தம் காணலாம். அனுவசிய உரையாடல்களை அர்த்தமற்ற கருமங்களை அடக்க ஒடுக்க, மனப்பூர்வமான அமைதி எதிர் நீச்சல் நடக்கிறது இங்கே. பத்து மணியளவில் பூசைக்குரிய ஆயத்தங்கள் சிறிய அளவில் ஆனல் சிறப்பாக நிகழ்கின்றன. சரியாகப் 11 மணிக்கு பூசை நிகழ்கிறது. ஆழ்ந்த அமைதியும் மந்திர உச்சாடனமும் போட்டியிடுகின்றன. அமைதிப் பிரார்த்தனையுடன் முதல் நாள் முடிகிறது.

இரண்டாம் நாள் வளமைபோலக் கருமங்கள் விசுவாசத்துடன் நிகழ்கின்றன. நண்பகல் நேரம் மாலை ஆதீனகர்த்தர் மஹாராஜ ஸ்ரீ.சு.து. ஷண்முகநாதக் குருக்கள் கோட்டத்துள் புன்முறுவல் பூத்த படி வருகிறார். விக்கிரகங்களை ஆர்வத்துடிப்புடன் பார்த்தபின், நல்ல சூழலில் கோட்டத்தை அமைத்து விட்டீர்கள் என மெச்சுகிறார். ''பிறிதொரு தடவை இங்கே வரவேண்டும்; நீங்கள் எல்லாம் காய் கறி அரிந்துதர சமைத்து எல்லோருமாக உண்டு மகிழ வேண்டும்'' என்ற வார்த்தைகளை உதிர்த்தார் மஹா ராஜ ஸ்ரீ. பிரசித்தமான ஆதீனத்து முதல்வர் உள்ளத்தில் இப்படி ஒரு எண்ணம் ஊற்றெடுத்த தென்றால், அவர் கம்பன் கோட்டத்தில் இணைந்து விட்டார் என்று தானே அர்த்தம்.

பெருமக்கள் ஆசிபெற கொடுத்து வைக்க வேண்டுமென்பர். குசேலர் கிருஷ்ணனுக்கு அவல் கொடுத்தது போல ஜெயராஜ் அன்பளிப்பு செய்கிறார் ஒரு சாயநிற வேஷ்டியை தமிழ்ப் பண்பும் சைவப் பண்பும் சங்கமித்து துளிர் விடுகிறதா? என என்மனம் துள்ளுகிறது.

ஆதீனகர்த்தர் புறப்பட்டகையுடன் ஒரு மோட்டோர் ரதம் வாயிலில் நிற்கிறது. அவசர அவசரமாக யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் ஜெபநேசன் ஜெயராஜ் இடம் ஒரு பார்சலைக் கொடுத்து விட்டு முக்கிய அலுவல் காரணமாக விரைகிறார். பார்சலைப் பிரிக்கிறோம். தென்னகப் பிரயாணம் முடித்து வந்த அதிபர், கம்பன் கோட்டத்துக்கு பரிசாக உவந்தளித்த போர்வைத் துணிகளைப் பார்க்கிறோம். பாரதி விழா வன்று, தனது கல்லூரியை தமிழ் மணக்கும் தேனுடையாகிய (பட்டிமன்றம், கவியரங்கம்) கம்பன் கழகத்தாரை தென்னகத்திலும் நினைவு கூர்ந்த பெரும் பண்பை வியக்கிறோம்.

பூசை நிகழ்த்துபவர் குறிப்பிட்டநேரத்துக்கு மூன்றும் நாள் வருகிறார். சாதுவாக, பயபக்தி மிக்கவராக, உச்சாடனச் சிறப்பு அமைந்தவராக உள்ள இவரிடம் பூணூல் கிடையாதே! அப்படியானல் அந்தணர் இல்லையா? என்ற ஐய(ர்)ப்பாடு என் மனதில் எழுந்தது. பூசை முடிந்து பிரசாதங்கள் உண்ணும் வேளை உரையாடிய போது பல விடயங்களை உணர முடிந்தது. ஆச்சரியப்பட்டேன்;

வேளாளகுலத்தைச் சேர்ந்த இவர் சமஸ்கிருதத்தை விரும்பிப் படித்தாராம் சோமாஸ் கந்தா கல்லூரியில் சமஸ்கிருத பாடத்துக்காகப் பரிசு கிடைத்ததாம். அப்போ இவரை மெச்சிய அந்தண ஆசிரியர், ''இவருக்கு 97 புள்ளிகள் கொடுத்தேன்; 3புள்ளிகள் குறைத்து விட்டேன்; ஏன் தெரியுமா? இவர் பிராமணன் இல்லையே என்ற பொருமையால்'' என்றாராம், இத்தகைய தகைமை பூசை புரிந்தவர்க்கு இருந்தது கேட்டுப் புளகித்தேன்.

பரமேஸ்வராகள் ஹரியில் சீதாராமசாஸ்திரிகளிடம் சமஸ்கிருதம் கற்றுராம். உச்சாடனச் சிறப்பை படிப்புத்தகைமையை அவதானித்த சாஸ்திரிகள், யாராவது அழைத்தால் பூசை செய்ய செல்லலாம் என்று ஆசிகூறினுராம். யோகசுவாமிகள், சாயிபாபா ஆசிகள் பெற்ற இவர் வேளாளராயினும் அந்தணஞகவே காட்சி தருகிருர். செந்தண்மை அவர் முகத்தில் தவழ்கிறது. இத்தகைய பண்பினர் பூசைசெய்ய, வழி பாடு செய்த நாம் பாக்கியசாலிகள் என்கிறது என் உள்ளம். அந்தணப் பெருந்தகை சுலோகம்படிக்க இவர் மலர் தூவி இறுதி நாள் பூசை செய்த காட்சி உத்தம பண்புக் கோலமாய் கம்பன் கோட்டத்தில் அமைந்தது.

மாலே வேளே பலர் வந்து போகிருர்கள் இரண்டு மணித்தியா லங்களாக இருந்து ஆலோசனைகள் வழங்கி மகிழ்கிருர் முரசொலி அதிபர் ம.சிவராசா அவர்கள். சிறந்த ஊதிபத்தி மணம் சதா கோட் டத்தில் மணக்க வேண்டும், பூமரங்கள் மண்டபத்தைச் சுற்றி நிற்க வேண்டும், மண்டப உள் அலங்காரம் அளவாக உள்ளத்தை தொட வல்லதாக நற்சிந்தனையை எழுப்புவதாக அமைய வேண்டும் என்ற தன் ஆசைகளே அடுக்கடுக்காய் முன்வைக்கிருர். உயர்ந்த மனிதர்கள் அன்பு எண்ணங்கள் எம்மைக் குளிர்வித்தன.

4, 5, 6 எனத் தொடர்ந்து இறுதிநாள் வரை பூசைகள், பிரார்த் தனே, பிரசாதம் வழங்கல், உண்டு களித்தல் நிகழ்வுகள் பக்குவமாக பயபக்தியுடன் தனி இன்பத்துடன் நிகழ்கின்றன. அறிஞர்கள், இலக் கிய ஆர்வலர்கள், இசை வல்லுநர்கள், மகளிர் என பலர் வருவதும் போவதுமாக கோட்டம் கொலுவுடன் மிளிர்கிறது. யாழ் பல்கலேக் கழக தமிழ் துறை பேராசிரியர் கலாநிதி சண்முகதாஸ், விரிவுரை யாளர் இ. சிவலிங்கராஜா பலதடவை வந்தனர். அண்மையில் யப் பான் சென்று திரும்பிய சண்முகதாஸ் சுவாரஸ்யமாக பலதும்பத்தும் கூறுகிருர். குட்டிச் சிவலிங்கராஜா (மகன்) காத்தவராயன் ஆட்டம் ஆடி மகிழ்விக்கிருன். வித்துவான் வேலனின் புளகிப்பு ஒரு பக்க உத டுகளேப் பிட்டுக் கொண்டு வெளிவருகிறது. "ஐயா தாளக் காவடிக்கு ஒரு வகுப்பு நடந்துங்கோ இங்கை. கரகம், காவடி, காத்தவராயன் ஆட்டம் இதுகளிலேதான் ஐயா எங்கடை மண் வாசனே வீசுகுது' என் கிருர் என்னேப் பார்த்து.

அடிக்கடி இரவு வேளே தோற்றமளிப்பவர் ஆலயமணி ஆசிரியர் புலவர் ஈழத்து சிவானந்தன். சீமான் வந்தால் கோட்டத்துக்குள் 'அடிபிடியோ' என்னும் வகையில் சர்ச்சைக்குரிய விடயங்களே எடுத்து கலக்குக் கலக்குவார். திருக்குறளுக்கு புதுக்கருத்துக்கள் கூறுவார்; சொற் பொழிவுக்கலேயின் திட்ப நுட்பங்களே விளக்குவார். தென்னக அறி

ஞர்களின் நெளிவு சுழிவுகளைப் படம் பிடித்துக் காட்டுவார். கருணாநிதி மாதிரி அடித் தொண்டையால் பேசி நகைச்சுவையுமூட்டுவார். எதிர்கருத்துகள் தெரிவித்தாலும் சீமானின் முகத்தில் புன்னகை தவழ்ந் தபடி இருக்கும்.

கம்பன் கழக தலைவர் திரு நந்தகுமார், செயலர் குமாரதாஸ், கவிஞர் கல்வயல் குமாரசுவாமி, சிவகுமார், ஏகநாதன், டொமினிக் ஜீவா, மகாராணி உரிமையாளர் சோமசேகரம், கவிஞர் சோ.பத்ம நாதன், நாகேஸ்வரன் எம்.ஏ, போன்ற பலர் கம்பன் கழக ஆர்வலர் கள், வர்த்தகப் பெருமக்கள் வருகைதந்து நவராத்திரி விழாவை கனதி யாக்கினர். கருத்துப் பரிவர்த்தனையால் கலகலப் பூட்டினர்.

தம்பி ஜெயராஜ் உரையாடல்; தம்மை வழி நடத்திய கம்பன் கழகத்துக்காக உழைத்த பெரியார்களை சுற்றிச் சுற்றி அடிக்கடி அணு கும். மறைந்த வித்துவான் சி. ஆறுமுகம் கலைஞர் யாழ் தேவன், வாழ்ந்து கொண்டிருக்கும் வித்துவான் க. ந.வேலன் ஆசிரிய பெருந் தகை க. சிவராமலிங்கம் என்போரின் தனித்துவத்தை சிறப்பை தனி ஈடுபாட்டுடன் அவர் கூறும் போது பார்க்க வேண்டும். நன்றிப்பெருக்கு தனி ஊற்றாய் பாய்ந்து நம்மை மகிழ்விக்கும்.

ஒரு நாள் வித்துவான் வேலனைப் பார்த்து பேசுகிறார்: ''ஐயா, துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையில் எமது கோட் டத்துக்கு வந்தார்கள்; எல்லாம் பார்வையிட்டார்கள் மெச்சினார்கள்; ஆசிகூறினார்கள். பொருளுதவியும் மகிழ்வுடன் செய்தார்கள். மலேசியா சிங்கப்பூரில் கம்பன் கோட்டத்துக் குரல் ஒலிக்க வகை செய்வேன் என்றார்கள்; அம்பாளின் வடிவமாகத் திகழும் இவ் அம்மையாரது ஆசி, இவை போன்ற நல்லோரது நல்நெஞ்சங்களின் பிரார்த்தனை நமக்குண்டு. ஆக கம்பன் கோட்டத்து எதிர்காலம் பலமாய் ஒளிமய மாய் அமையும் என நம்புகிறேன்'' என்றார்.

நவராத்திரி இறுதி நாள் விழா நெஞ்சை உருக்கியது. என் கண் களில் கணணீர் கசிந்தது. இசைக்கச்சேரி, பஜனை, பாதபூசை ஆகிய விசேட அம்சங்கள் அற்புதமாய் அமைந்தன. பல் துறை வல்லுநர்கள் சுவைஞர்களின் சங்கமமாய் அன்றைய விழா அமைந்திருந்தது. பூசை, பிரார்த்தனையை தொடர்ந்து திருமதி கணநாதலிங்கம் அவர்களின் இசை நிகழ்ச்சி கற்கண்டுச் சுவையென இனிக்க வைத்தது. சங்கீதபூஷணம் திரு வி.கே. குமாரசுவாமியின் வயலினிசை மெருகூட்டியது. அடுத்து பண்ணிசை வே.சிவஞானம் அவர்கள் பண்ணிசைப் பஜனை நடாத்தி னார்கள். அட்சர சுத்தியுடன், பொருள் உணர்ந்து, தாழ்த்தியும் உயர்த் தியும் பாடி சங்கமித்த அனைவரையும் தம்முடன் இணைத்துக் கொண்

டார். பாடிய வேளை தானே வயலினையும் மிக நுட்ப திட்பத்துடன் கையாண்டார். அவர் பாடப் பாட பலர் தொடர்ந்து இணைந்து பாடத் தொடங்கி விட்டார்கள். என்னை அறியாமல் நானும் வாய் விட்டு சுதிக்கமைய இணைந்து பாடத் தொடங்கி விட்டேன். கண்க ளும் பனித்தன. ரசித்தவர்களும் ஆடாது அசையாது மெய்ம்மறந்தி ருந்தார்கள் Concentration என்று ஆங்கிலத்தில் கூறப்படும் 'ஒருவிட யத்தில் ஒன்றி இணைதல்' என்ற நிகழ்வு பஜனையின் போது கம்பன் கோட்டத்தில் நிலவியது. 'சும்மா இரு' என்று ஆத்மீககாரர் கூறு வார்களே அந்த உச்சநிலைக்கு ஆற்றுப்படுத்தும் அரிய நிகழ்வாக பஜனை விளங்கியது. ஐம்பது பேராயினும் நல்ல பலன் தந்த நிகழ்ச்சி இது.

அடுத்து கம்பன் கழகத்து மூத்த உறுப்பினர் கலாநிதி வேலனை ஜெயராஜ் வேண்ட அவர் மண்டப நடுவே அகன்று விரிந்த தாம்பா ளத்தில் ஏறி நிற்கிறார். இளம் உறுப்பினர்கள் பணிந்து குனிந்து வணங்கி நீரினால் குருவின் பாதங்களை குளிப்பாட்டி பூவைத்த காட்சி என்னைப் புல்லரிக்கச் செய்தது. பிற் பகுதியில் ஜெயராஜ், புலவர் ஈழத்துச் சிவானந்தன் என்போர் பணிந்து பாதபூசை செய்த வேளை என் மனதில் இழையோடிய உணர்வோட்டம் வார்த்தைகளில் அடங்கா. வித்துவான் வேலனின் கண்களில் உடைப்பெடுத்து கண்ணீர் ஒழுகி யது. பக்தி சிரத்தையுடன் கம்பன் கோட்டத்தினரை பின்பற்றும் நானும் பாதபூசை நிகழ்ச்சியில் மிகப் பிரியமுடன் ஈடுபடுகிறேன்; இன்புற் றேன்

இளம் சந்ததி முதியோரை மதிக்காத காலமிது. எத்துறை வல்லு னரெனினும் எள்ளிநகையாடி, உதவாப் பண்டங்களென தூக்கி எறி யும் உணர்வோட்டம் தலைகாட்டும் காலமிது. இத்தகைய சூழலில் கம்பன் கோட்டத்தில் இளைஞர்கள் (பல்கலைக்கழக வைத்தியப் பிரிவு மாணவர், தமிழ் விசேட பிரிவு மாணவர்) மற்றும் கணிப்பீடான பெருமக்கள், பெரியாரொருவரின் பாதங்களை நீர் கொண்டு கழுவி பூசை செய்யும் மனோநிலை, செய்கை எத்துணை எழிலார்ந்த புனித பண்பாடு என புளகித்தேன். பணிவுடைமை நன்றியுடைமை என்ற பண் புகள் செயல்மூலம் வளர்க்கப்படும் நிலைப்பாட்டை நினைவு கூருகிறேன். 'புலுடா' சங்கதிகள் என்றால் அறுவடை கிடையாது. இங்கே உண் மையான உணர்வோட்டம் அத்தனை அங்கத்தினரிடம் இழையோடு வதை காணமுடிந்தது. அடக்கப் பண்புடன் நல்ல அறுவடை கண்ட நவராத்திரி இறுதிநாள் விழாவை எப்படி மறக்க முடியும்? கம்பன் கோட்டத்தில் நவராத்திரி காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் என்னுடன் ஏதேதோ பேசுகின்றன; புதிய சிந்தனையில் மூழ்க வைக்கின்றன.

# சைவசித்தாந்தமும் மார்க்சியமும்

— தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

முன்தொடர்...!

உலகியற் செல்வங்கள் அறிவறிந்த ஆள் வினையால் படைக்கப் படுபவை; அரசியல் நெறிமுறைகளால் முறைப்படுத்தப்படுபவை. ஒரோவழி, புண்ணிய பாவ உணர்வாலும் முறைப்படுத்தப்படும். செல்வ ஏற்றத் தாழ்வில் வழங்கப்பெறும் சொற்கள் ஏழை—பணக்காரன் என்பதுவே. இந்த ஏற்பாட்டுக்கும் ஊழுக்கும் யாதொரு தொடர்புமில்லை கடவுளுக்கும் யாதொரு தொடர்புமில்லை. புண்ணிய பாவத்தினை நினையாமையாலும் முறை செய்யும் அரசின்மையாலுமே ஏழை—பணக்காரன் ஏற்பாடு தோன்றுகிறது. இவை அப்பட்டமான சுயநலம் படைத்த மனிதர்களின் ஏற்பாடு பிற்காலச் சமய நூல்களில் இந்த ஏற்பாட்டுக்கு மறுப்பு இல்லாமல் இருக்கலாம். அதனால் இந்தமுறை புனிதமாகிவிடாது.

''ஊழ்'' என்கிற சொல் ''ஊழ்த்தல்'' என்கிற சொல்லின் அடிப்படையில் பிறந்தது. ஊழ்த்தல் என்றால் விளங்கத் தோன்றுதல் என்பது பொருள். உயிர், நேற்று - நேற்று முன்தினம் தொடர்ந்து வாழ்ந்த முறை, இயற்றிய செயல், முயற்றிய வினை ஆகியவற்றின் உணர்வு உயிரிடத்தில் இயல்பாக விளங்கித் தோன்றுவது இயற்கையே. இதனைத்தான் பழக்கம் என்பர். பழக்கத்தின் காரணமாக வேம்பை இனிப்பாகவும், கரும்பைக் கசப்பாகவும் துய்க்கும் புழுவினைக் காண்கிறோம். அதனால்,

''பழக்கம் தவிரப் பழகுவ தன்றி
உழப்புவ தென்''

என்று திருவுந்தியார் அறிவுறுத்திற்று. எனவே முன்னேற்றத்திற்குப் பயன் தராத பழக்கங்களால் வந்தமையும் உணர்வின் வழியதாகவே வாழ்தல் வாழ்க்கைக்குத் துணை செய்யாது; பயன்தராது என்று ஒருவன் தெளிந்து துணிவானானால் அந்த உணர்வை மாற்ற முடியும் என்பதே சித்தாந்தத்தின் முடிவு. மனிதனின் அறிவறிந்த ஆள்வினையை விட ஊழ், வலிமையுடையதன்று. ஆதலால் வினை, விதி, ஊழ் என்கிற சொற்கள் உணர்த்தும் தத்துவத்தின்வழி ஒருவனது உழைப்பின் உபரியை மற்றவன் எடுத்துக்கொள்வதைச் சைவசித்தாந்தம் ஏற்கவும்

இல்லை. அங்கீகரிக்கவும் இல்லை. மாறாக, வினையின் பயன், செய்தவனையே சாரவேண்டும், என்று ஐயத்திற் கிடமின்றிக் கூறுகிறது. அதாவது வினையின் விளைவு நன்மையாக இருந்தாலும், தீமையாக இருந்தாலும் அவரவர்களையே சாரும். இதனை, தருமையாதீனக் குரு முதல்வர் குருஞான சம்பந்தர்,

"அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்
எவரெவர்க் குதவினர் எவரெவர்க் குதவிலர்
தவரவர் நினைவது தமை உணர்வதுவே"

என்று அருளியுள்ளமையால் அறிக.

மேலும், இப்பிறப்பிலேயே சார்ந்து துய்க்கக் கூடிய வினைகளும் உண்டு. அடுத்த பிறப்புகளுக்குத் தொடர்வனவும் உண்டு.

சராசரி அறிவோடு நோக்கினால் கட்புலனுக்கு எளிதாகத் தெரியக் கூடிய பயன்கள் இப்பிறப்பிலேயே துய்க்கக் கூடியனவாக அமையக் கூடும். இப்பொழுது, இந்தந் தலைமுறையில் நம் கண்முன்னே தெரிகிற வெளிச்சமான ஓர் உண்மை! உழைப்பாளிகள் உழைக்கிறார்கள்! உலகம் முழுவதும் நுகர்வதற்குரிய பொருள்களைப் படைத்து அளிக்கிறார்கள்! ஆனால், உழுது உலகத்திற்கு உணவளிப்பவன் போதிய உணவில்லாமலும், உலகு உடுத்துமகிழ உடைகொடுப்பவன் போதிய உடையில்லாமலும், மகிழ்ந்து கூடியிருக்க இல்லம் அமைத்துக் கொடுத்தவன் வசதியான இல்லம் இல்லாமலும் வாழும் நிலையினை இன்று காண்கின்றோம். மதிப்புடைய பயன்பாடுடைய உற்பத்தி செய்தற்குரிய திறனை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதாவது சித்தாந்த மரபின்படி அவர்களுடைய ஊழ் நன்றாகவே அமைந்திருக்கிறது. ஆனால் இப்பிறப்பில் அவர்களுடைய உழைப்புச் செல்வத்தை அவர்களிடமிருந்து தட்டிப்பறிப்பதை எங்ஙனம் ஊழாகக் கருத முடியும்? இங்ஙனம் பிறர்பங்கை எடுத்துக் கொள்வது நெறி முறையன்று, என்று கருதிய அரசுகள் இயற்றிய சட்டங்கள் மூலம் உழைப்பாளர்களுக்குரிய பங்கு கிடைத்து வருவதைப் பார்க்கிறோம். இதனால் ஏழை - பணக்காரன் வேறுபாடு ஊழின் பாற்பட்டதன்று என்பது உறுதியாகிறது. கண்முன்னே தெரிகிற இந்த உண்மைக்குக் கட்புலனுக்கு வராத தத்துவத்தைப் போட்டுக் குழப்புவதில் என்ன பயன்?

பிற்போக்கு வாதிகள் வினையின் பயனாகிய செல்வத்தை, வினை இயற்றியோருக்கு உரிமையாக்காமல் அவர்களின் பங்கை எடுத்துக்

கொள்வதற்காக, வினைக்கு அர்த்தமற்ற கருத்தைக் கற்பித்துள்ளனர் என்பதை முன்னே கூறியவற்றால் அறியலாம். இதுவே சைவசித்தா தத்தின் கொள்கை. மார்க்சியம் சுரண்டலை அறவே கண்டிக்கிறது. எப்படி உழைப்பாளி சுரண்டப்படுகிறான் என்பதையும் அதை மாற் றும் வழியையும் கூலி, விலை, இலாபம் என்ற தத்துவத்தின் வழி தெளி வாக விளக்கிய முதல் மேதை மார்க்சு தான். ஆக, பொருளியல் ஏற் றத்தாழ்வற்ற சமுதாய அமைப்பிற்குரிய அடிப்படைக் கொள்கைகள் சைவசித்தாந்தச் சமயத்திற்கும் மார்க்சியத்திற்கும் முரண்பாடில்லை.

இறைவன் முதற் பொருளே!

உயிர்கள், வாழ்வதற்கென்று அமைந்தது இந்த உலகம். இந்த உலகம் இயற்கை, இது கடவுளால் படைக்கப்பட்டதன்று, என்ற கருத்தில் சைவசித்தாந்தமும் மார்க்சியமும் இசைந்த கருத்துடையன வாகவுள்ளன.

''நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தனமுறையே!''

என்பது ஐங்குறு நூற்றுக் கடவுள் வாழ்த்து. இப்பாடலில் குறிக்கும் ''முகிழ்த்தன'' என்கிற சொல் தன் வினைச்சொல். அதாவது தாமே தோன்றின என்பதே கருத்து. இங்கு மூவகை உலகம் ''அவன், அவள், அது'' என்று சுட்டப்படும் மூவுலகே தவிர பௌராணிகத்தில் கூறப்படும் கட்புலனாகாத உலகங்களையல்ல என்பதை அறிக. ஆதலால் உலகம் தோற்றுவிக்கப் பெற்றதன்று, திருக்குறளும் கூட, உலகத் திற்கு முதற்பொருளாகக் கடவுள் இருக்கிறான் என்று சொன்னதே தவிர, கடவுள் உலகத்தைப் படைத்தான் என்று சொல்லவில்லை;

''அகரமுதல எழுத் தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு''

சைவ சித்தாந்தத்திலும் கூடக் கடவுளது திருவருட் சத்தியின் இயக் கத்தால் ''மாயை'' என்னும் அருவப் பொருளிலிருந்து உலகம் தோன்றி விரிவடைகிறது என்பதே கருத்து. என்றும் உளதாய் அருவ மாய் ஒரு நிலையதாய் விளங்குவது மாயை என்று சித்தி கூறுகிறது.

''நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத்திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்
சத்தியாய்ப் புவனபோகம் தனுகரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யுமன்றே''

என்பது காண்க.

ஆதலால் உலகம் இயற்கை. அது உள்பொருள்; உண்மையா னது; இந்த உலகிலேயே உயிர்களுக்குத் துய்ப்பனவும் உய்ப்பனவும்

கிடைக்கின்றன என்கிற கருத்தில் இருதத்துவ இயல்களும் ஒத்து நிற்பதை ஓர்ந்தறிக.

வாழ்க்கை வாழ்வதற்கே!

உலகில் சில சமயங்கள் கூறுவதுபோல் சித்தாந்தச் சமயம், வாழ்க்கையை எள்ளுவதுமில்லை; பழிப்பதுமில்லை. இந்த மானிடவாழ்க்கை அரியது; போற்றுதலுக்குரியது; பயன்பாடுடையது என்றே சைவ நூல்கள் கூறுகின்றன.

''வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி
மதித்திடு மின்''

என்றார் அப்பரடிகள். மார்க்சியமும் இந்த வாழ்க்கையைப் பாராட்டுகிறது. வாழ்வதற்கே வாழ்க்கை என்பது மார்க்சியம். ஆனால் வாழும் நெறிமுறைப்படி வாழ்தல் வேண்டும். அதாவது, வள்ளுவர் கூறியாங்கு ''வையத்துள் வாழ்வாங்கு வாழ'' வேண்டும். மானிட வாழ்க்கையின் போக்குகளைப் பற்றி மார்க்சியத்தின் திரண்டகருத்து இது.

''விலங்குகளும் உண்கின்றன; உறங்குகின்றன; இனவிருத் செய்தி கின்றன; உடற்பாதுகாப்பில் முனைப்புடன் நிற்கின்றன. மானிடனும் இவற்றை மட்டுமே இயற்றினால் அது மானிட வாழ்க்கையாகாது; மானிடவாழ்க்கைக்கும் இவை இன்றியமையாதவை என்பதில் கருத்து வேறுபாடில்லை. ஆனால் இவற்றிலும் மேம்பட்ட சில வாழ்க்கை நோக்கங்கள் மானிடத்திற்கு உள்ளன. அவை என்ன? மானிடத்தின் தரத்தை உயர்த்துதல்; ஆன்மாவைச் செழிப்புறச் செய்தல்; உலகத்தின் எண்ணற்ற வைப்புகளை அனுபவத்திற்குக் கொண்டு வருதல்; காலம் தூரம் ஆகியவற்றை வென்று விளங்கும் ஒருலகம் காணல்; மனித நாகரிகத்தினை அரித்து அழிக்கும் நச்சுத் தீமைகளை அறவே அகற்றுதல்; உலக வரலாற்றுக்கு உந்து சத்தியாக விளங்குதல் இவை மானிடத்தின் சிறப்புகள். இத்தகைய சிறப்புகளுடன் மனிதன். வாழ்ந்தால் தான் மானிட வாழ்க்கை. அஃதில்லையேல் விலங்கியல் வாழ்க்கை.''

இக்கருத்து சித்தாந்தத்திற்கும் ஏற்புடையதேயாம். ஆதலால் மானிட வாழ்க்கையை அர்த்தமுடையதாக்குவதில் இவ்விரு தத்துவங்களும் ஒத்து நிற்பது நமது பேறு.

(வளரும்)

உண்மைவிளக்கம்

# திருக்குறள் காமத்துப்பால்

## (க) வள்ளுவனுர் களவியல்

### முதுபெரும் தமிழறிஞர் வித்துவான், பொன். அ. கனகசபை

## 3 இடந்தலைப்பாடு

முன்தொடர்....

இயற்கைப் புணர்ச்சியாகிய சிவகுருதரிசனம் பெற்ற பக்குவான்மா' அறிவு தெளிந்து வரைந்து கொள்ளாதாயின் தற்போத அகற்சியாகிய பாங்கற கூட்டம், இடந்தலைப்பாடு என்பவற்றுள் ஒன்றுல் சிவத்தை எய்துதலே மரபு. இடத்தலைப்பாடாவது, சிவகுருதரிசனம் பெற்ற நாள் முதல் பக்குவான்மா குருமீது உண்டான அயரா அன்பால் சிவயோக நெறி நின்று, பெறுதற்கரிய பேரானந்தத்தைடபெற்று அநுபவம் கைவரப் பெறுதலாகும்.

''இடந்தலைப்பாடு............
அருட்குரு தரிசனத்து அன்பு மிகுதியால்
பேரா நந்தம் பெற்றனு பவித்தல்'' என்பது பேரின்பக்கெளு

''வேண்டுதல் வேண்டாமையாகிய வேறுபாட்டுணர்வு அகன்ற சுத்த துரியாதீத நிலையிலுள்ளது பேரின்பப்பேறு. இந்தப் பேரானந்தத்தை நல்லார் இணக்கத்தாலும், சிவபூசையாலும், திருவைந்தெழுத்துச்சிந்தனையாலும் என்றும் நீங்காது நிலைபெறச் செய்யலாம்; கைம்மாறுகருதாது பேரின்பத்தை முன்னொருநாள் அடியேனுக்குக் கூட்டுவித்ததிருவருள், இன்னும் இருக்கத்தானே செய்கின்றது. இன்றும் அததகைய கருணைக்கு ஓர் இடையூறுமில்லை. மீண்டும் அத்திருவருள் கூட்டிய சிவஞானப் பூமிக்கே சென்று அத்திருவருளை வேண்டி நின்ருற் பேரின்பம் பெறுதல் எளிது; என நினைந்து பக்குவான்மா செல்லா நின்றது.

திருவருட்சத்தியும் போகபூமியைவிட்டு, அருளுதலையே குறிக்கோளாகக் கொண்டு சிவகுரு உருவந்தாங்கி, ஞானபூமிக்கு வந்தருளியது. பக்குவான்மா முன் பாங்கற்கூட்டத்துச் சொன்னவாறே (சிவஞான யோக நெறியில் சென்றது.

[இடந்தலைப்பாட்டிற்கே உரிய சிறந்த செய்திகள் மூன்று குறள்களாற் கூறப்படுகின்றன.]

பக்குவான்மா, "அவனேதானே ஆகிய அந்நெறி ஏகனாகி நிற்க" என்பதற்கிணங்கச் சிவோகம்பாவனை செய்து நின்றது. "முன்னரே சிவோகம் பாவனையில் விளங்கித் தோன்றிய சிவகுருவையே சிவமெனச் சிந்தித்து வேறொன்றையுஞ் சிந்தியாது இருக்க வேண்டிய யான் விதியின்மையால் அந்த இன்பநிலை குலைந்து உலகியலிற் புகுந்தேனே;, இழந்த இன்பசுகம் இன்னமுங் கிடைக்குமோ" என அந்த இன்பத்தையே எண்ணி எண்ணி வருந்திய வண்ணம் தியானத்தில் ஈடுபட்டது. பாசநீங்கிய பக்குவான்மாவிடத்துச்சிவம் கருணையாகிய அருள் பாலித்தது. அந்த அருள் விளக்கத்தைத் துணையாகக் கொண்டு பக்குவான்மா சிவகுருவைத் தரிசித்தது. சிவகுருவின் ஞானோபதேசத்தில் அழுந்திய பக்குவான்மாவுக்குச் சிவஞானம் உதயமாயிற்று! அச்சிவஞானம் முதிர்ந்து பேரின்ப அநுபவமாயிற்று.

இடந்தலைப்பாட்டிலே சற்குரு தரிசன இன்பம் பெற்று மகிழ்ந்த பக்குவான்மா, "வாதம் முதலிய உடற்பிணிகளுக்கு மருந்தாக உபயோகப்படுவன அந்தந்த நோய்களுக்குக் காரணமானவையன்றி, அவற்றுக்கு மாறான தன்மையினை உடையனவாயிருக்கும். அவ்வாறன்றி, முன்னர் இயற்கைப் புணர்ச்சியில் இந்தச் சற்குருவாகிய திருவருட் சத்தியினாலுண்டாகிய உயிர் வருத்தந்தணிப்பதற்கு மருந்தும், அவ்வருத்தத்துக்குக் காரணமான தானே ஆயினாள்" எனப்பாராட்டியது.

"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து" (திருக்குறள் 1102)

இயற்கைப்புணர்ச்சியாகிய சற்குரு தரிசன இன்பத்தில் பக்குவான்மாவை நிலைத்திருக்கவிடாது பிராரத்த வினைப்போகம் அநுபவிப்பிப்பதற்காகத் திருவருள் பிரித்தது. (இத்தகைய பிரிவு பரமுத்திவரை இடையிடையே நிகழும்.) திருவருளின் இச்செயலால் இன்பத்தை இழந்த பக்குவான்மா வருந்தியது. திருவருட் சத்தியால் உண்டாகிய பக்குவான்மாவின் வருத்தம், இடந்தலைப்பாட்டிலே பெற்ற குருதரிசன பேரின்ப அநுபவத்தாலே தீர்ந்தது. தீர்ந்ததும் சிவகுருவின் குறிப்பறிந்து அவர்மீது தமக்கு உண்டாகிய அன்பினை மகிழ்ச்சியோடு எடுத்துக்கூறலாயிற்று. இதுவே புணர்ச்சி மகிழ்தலாகும்.

❀ ❀ ❀

இயற்கைப்புணர்ச்சியின் பின்னர் திருவருள், வினைப்போக வாசனை பற்றி உயிரைப்பிரிந்து போகச்செய்து, பசுஞான பாசஞானங்களையுஞ் சிறிது உதிக்கச் செய்தது; அதனால் ஆன்ம போதமுஞ் சிறிது விழிப்புற்றது; நெஞ்சமும் தெளிவின்றி மயங்கியது. சிவகுருவின் திருநயனம் பார்க்கக் கிடையாமையினால் அவற்றோடு வண்ணத்தால் ஒத்

தாலும், திருநோக்கால் ஒவ்வாத பூக்களைக் கண்டபோதெல்லாம் அவற்றில் மயங்கிக் காதல் கொண்டது. சத்திநிபாத உத்தமநிலை எய்தாத அபக்குவர், சகல சாக்கிர நிலையிலே பிரகிருதிமாயா காரியமான மலர்களை ஊனக்கண்ணுக்கு ஒப்பாகக் காண்பர். இதுவே அபக்குவர் பலரும் சுட்டிக்காணும் பொதுநோக்கமாகும். சிவனடியாராகிய பக்குவர், ஞானக்கண்ணால் வியாபகமாகக் காண்பர். அதுவே சிறந்த நோக்கும். வியாபகமான சொரூப நோக்கால் வியாபகப் பொருளான அருட்சத்தியையும் பார்ப்பர். ''ஊனக்கண் பாசம் உணராப் பதியை, ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி'' என்றார் மெய்கண்டார்.

இவ்வுண்மையை உணர்ந்த பக்குவான்மா தன் ஆத்மபோதமாகிய நெஞ்சை விளித்து, ''நெஞ்சே! பக்குவம் முதிர்ந்த என்னாற் காணப்படும் சற்குருவாகிய திருவருட்சத்தியின் கண்களைப் பக்குவமற்றோர் பலராலும் பார்க்கப்படும் பூக்கள் ஒக்குமென்று கருதித், தாமரை, செங்கழுநீர் முதலிய பூக்களைக் கண்ட போதெல்லாம் மயங்கி நின்றாய்; நின்னறிவு அருட்சத்தியின் கண்களைக் காணத்தக்க அறிவன்று'' என நெஞ்சை இழித்துரைக்கு முகமாக அருட்சத்தியாகிய சற்குருவின் நலத்தைப் புனைந்துரைத்தது.

> ''மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
> பலர்காணும் பூவொக்கும் என்று'' (திருக்குறள் 1112)

இடந்தலைப்பாட்டின்கண் சற்குருமீது தனக்கு உண்டாகிய அன்பினை மகிழ்ந்து கூறிய பக்குவான்மா, இவ்வாறு அந்தச் சிவகுருவின் நலத்தைப் புனைந்து உரைக்கலாயிற்று, இதுவே நலம் புனைந்துரைத்தலாகும்.

❋ ❋ ❋

பக்குவான்மா செய்த பூர்வ சிவபுண்ணியத்தின் பயனாகப் பரமசிவனே சிவகுருவின் உருவமாய் இடந்தலைப்பாட்டிலே தரிசனமளித்தார். வீடு காதலித்து வந்த அந்த ஆன்மாவின் பக்குவமறிந்து அதற்கேற்ப உபதேசஞ் செய்தருளினார். அவ்வுபதேசத்தில், ''கருவி கரணங்களின் சார்பால் உண்டானது சுட்டியறியுந்தூல அறிவு, அவ்வறிவு வியாபக அறிவாகும்படி அருட்சத்தியே மறைந்து திரோதான சத்தியாய் நின்று அறிவிக்கும். அதனால் அறியாமையைச் செய்யும் மலசத்தி படிப்படியாகத் தேய்ந்து தேய்ந்து கழியும். மல மறைப்பின் தேய்வுக்கு ஏற்பத் திரோதான சத்தியும் அருட்சத்தி உருவமாக ஆன்மாவிற்பதியும். அதிதீவிர சத்தியாய்ப் பதியும்போது, உயிருக்குயிராயிருக்கும் சிவத்தின் இயல்பு பக்குவான்மாவில் விளங்கித் தோன்றும்; பாச கரணங்களும் சிவகரணங்களாகும். பரம்பொருளோடு ஒற்றித்து

நின்று இறைபணியாற்றினால் வாசனாமலம் ஆன்மாவைத் தாக்காது'' என்று விளக்கியருளினார்.

பக்குவான்மாவின் வாசனாமலம் காரணமாகத் திருவருள் சிவ குருவை விட்டு அதைப்பிரிந்து போகச் செய்தது. அவ்வாறு செய்த போதிலும் பக்குவான்மா தன் சொரூபநிலை குன்றாது, தைலதாரை போல இடையறாது சிவகுருவையே சிந்திக்கும் வல்லமையுடையதாய், அவர் செய்த ஞானோபதேசத்தில் உறைத்து நின்றது. இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடுகளின்கண் எய்திய சிவானந்தத்தை எண்ணி எண்ணி அப்பேரானந்தத்தில் அழுந்தி மதுவுண்ட வண்டு போன்று அதிலே தோய்ந்து அதுவாயே நின்றது.

வாசனைபற்றி விளங்கித் தோன்றிய பாசக்கூட்டங்களைச் சடம் எனவும், தன்னின் வேறானவை எனவும், சிவச்சார்புக்குத் தடை என வுங் கண்டது; வியாபகமாய் நின்றறிய வேண்டிய அருட்சத்தியை அறிய, அவற்றின் சுட்டியறியுந் தூலத்தன்மை மாறவேண்டுமெனவும் உணர்ந்தது. அருளையின்றித் தனக்கொரு செயலுமில்லை எனத் தற்போத முனைபற்று நின்றது; பார்ப்பித்தும் பார்த்தும் உபகரிக்கும் அருட்சத் தியை வியாபகமாய் நின்றறிய அவாவுற்றது. அதற்காக ஒவ்வொன்றா கச் சுட்டியறியும் தன் பாச கரணம் வியாபகமாய் நின்றறியும் சிவ கரணமாக மாறவேண்டுமெனவும் விரும்பியது.

உடம்பிலுள்ள உறுப்புக்கள் அனைத்திலும் கண்ணே சிறந்தது; அக் கண்ணிலும் பார்க்கக் கருமணி சிறந்தது. அவைகளிலும் பார்க்க அதிக சிறப்புடையது கருமணியிற் பாவை. அரும்பெருஞ் சிறப்புமிக்க அந்தப் பாவையை விளித்து, 'என்கண்ணிற் கருமணியின்கண் உறை யும் பாவாய்! நீ அங்கு நின்றும் போகருவாயாக; போதராது இருத் தியாயின், யாம் விரும்புஞ் சிவகுருவாகிய அருட்சத்தி இருப்பதற்கு இடமில்லையாகும்'' என்று கூறியது.

''கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்
திருநுதற் கில்லை இடம்''
(திருக்குறள்-1123)

கருவிகளை விட்டு நீங்கியதும் படிமுறையாக உதிக்கும் உண்மை ஞானமாகிய சுத்தநிலையாற் சிவத்தை எய்துமாற்றை இத்திருக்குறள் மூலம் திருவள்ளுவர் விளக்கியருளுகின்றார்.

திருவள்ளுவர், அறிவனூற்பொருளை உலகநூல் வழக்கில் உய்த்து அறியுமாறு அமைத்துக் காமத்துப்பாலை இயற்றியருளினார்; இத்திருக்

குறளில் அவர் ஐம்புலச்சேரி புகுந்து அலேந்து திரியும் ஐம்பொறியாகிய மதயானையைப் பக்குவான்மாவாகிய பாகன், அறிவாகிய தோட்டியால் அடக்கி, நிரதிசயானந்த இன்பவீட்டிற்கு வழி வகுக்குமாற்றைச் சைவசித்தாந்த நெறியில் வைத்துக் காட்டுகின்றார்.

'இத்திருக்குறளில் ''போதாய்'' என்ற சொல் போவாய், வருவாய், மாறுவாய் என்னும் மூன்று பொருள்களைத் தந்து நிற்கின்றது. போவாய், வருவாய் என்னும் இருபொருள்களும் உலகநூல் வழக்கு நோக்கிய உபசாரப்பொருள்கள். மாறுவாய் என்ற பொருளே, அறிவநூற் பொருள்பற்றிய உண்மைப் பொருள். போதாய் என்ற சொல் உலக நூல் வழக்குப்பற்றிக் கருமணியிற் பாவாய் போவாய்; யாம் வீழும் திருநுதல் வருவாய் என. முன்னும் பின்னும் இணைந்து நடுநிலை விளக்காய், உபசாரப் பொருள்தந்து நிற்கின்றது; அறிவநூற் பொருளுக்கிணங்கப் போதாய் என்ற சொல், கருமணிப் பாவையின் ஒவ்வொன்றுயச் சுட்டிப் பார்த்தறியுந் தன்மை வியாபகமாகி எல்லாவற்றையும் ஒருங்கு உணருந்தன்மையாக மாறுவாய் என உண்மைப் பொருள்தந்து நிற்கிறது.

சிவனுருவாய் அவதரித்தருளிய சைவசமய குரவர் நால்வரும், பாசகரணம் சிவகரணமாக மாறப்பெற்றவர்கள். அவர்கள் சிவகரணங்களைச் சிவமாகவே போற்றியுள்ளார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் ''கூறுநாவே முதலாகக் கூறுங்கரணமெல்லாம் நீ'' என்று பாடியருளினர். அப்பரடிகளோ ''கண்ணே கண்ணிற்கருமணியே மணியாடு பாவாய் காவாய்'' என்றருளிச் செய்துள்ளார்.

சைவசித்தாந்தக் கொள்கையின்படி சுத்தநிலையில் பக்குவான்மா சிவத்தோடு கூடும்வரை பதி பசு பாசங்களிடையே படிமுறையாக நிகழும் நிகழ்ச்சிகளைப் பத்துவகைப் படுத்தியுள்ளார்கள். அவையே தசகாரியமாகும். அத்தசகாரியங்களை முன்னும் பின்னுமாக மாறி உடனிகழும் அநுபவம் பற்றி ஐந்து நிலைகளாக வகுத்துள்ளார்கள். அவற்றுள் இரண்டாம் நிலையாகிய சுத்த சொப்பனத்தில் நிகழும் உடனிகழ்ச்சி அநுபவம் இத்திருக்குறளிலே கூறப்பட்டிருக்கின்றது.

சிவகுருவாகிய அருட்சத்தியைத் ''திருநுதல்'' என்றதனல் சிவரூபமும், ''நீ போதாய்'' என்றதனல் தத்துவ சுத்தியும், ''யாம் வீழும்'' என்றதனல் ஆன்ம தரிசனமும் உடனிகழுமாறு கூறப்பட்டன. சிவரூபத்திலே தத்துவ சுத்தியும், ஆன்ம தரிசனமும் உடனிகழ்ந்த சுத்த சொப்பனநிலை அநுபவம் இது. ஞானப்பியாசமாகிய தசகாரிய உடனிகழ்ச்சிக்கண் இவற்றை விரிவாக அறியலாம்.

சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரத்தில் "தம்முதல் குருவுமாய்" என்பதனால் சிவரூபமும், "விட்டு" என்பதனால் தத்துவ சுத்தியும், "அன்னியமின்மையின்" என்பதனால் ஆன்ம தரிசனமுங் கூறியவாறு பற்றியும் இதனை இலகுவாக விளங்கலாம்.

பரமாசாரியரை விட்டுப்பிரிந்து பாண்டிநாடு சென்ற மாணிக்க வாசகர் வேறொன்றையும் விரும்பாது பரமாசாரியரையே நினையவல்லவராய் நின்று; அரசபோகத்தை உதறித்தள்ளிவிட்டுப் பரமாசாரியரைக் காணப்புறப்பட்டதும்; வள்ளியம்மையார் விருத்த வேதியரான ஸ்கந்த குருவை விட்டுப்பிரிந்து தினைப்புனம் நோக்கிச் சென்று, அப்பாற் செல்வதைக் கைவிட்டுப் போனவழியே திரும்பி ஸ்கந்த குருவே தஞ்சமென ஓடிவர நேர்ந்ததும் சிவகுரு தரிசனமாகிய சிவரூபத்தில் தத்துவசுத்தியும், ஆன்ம தரிசனமும் உடன்நிகழ்ந்த அநுபவச் செய்திகளேயாகும். இவற்றை ஒருபுடை ஒத்ததே சிவகுருவின் உபதேசத்தையே நினைக்கவல்லதாய் அதில்உறைத்து நின்ற பக்குவான்மா, கருமணியின் சுட்டியறியும் தன்மை யைவிட்டுத் திருநுதலின் வியாபகமாய் அறியுந் தன்மையாய் மாறுமாறு கூறியதும் எனச் சிந்தித்துத் தெளிக.

'தமிழ் வேதமாகிய திருக்குறள் உணர்த்துவது சைவசித்தாந்த ஒளிநெறியே' என்பதற்கு உரை ஆணியாகத்திகழுகின்றது இத்திருக்குறள்.

---

அடுத்த இதழில்...!

✯ புதுமைப்பித்தனின்

காளிகோவில்

✯ பேராசிரியர், அ. சண்முகதாஸ்

மனோன்மணி சண்முகதாஸ் M.A யின்

இணைந்த சிந்தனை

யப்பானில் கமிவழிபாடு – யாழ்ப்பாணத்தில் கணேசவழிபாடு

ஓர் ஒப்பீட்டாய்வு

✯ கலாநிதி, சோ. கிருஷ்ணராசாவின்

அகச்சமய முரண்பாடுகளும்

சித்தாந்த முடிபும்

செந்தி நாதையரின் விளக்கங்கள் வெளிவருகின்றன.

# ஜெயராஜ் பதில்கள்

**ச. தில்லையம்பலம் மானிப்பாய்**

**கேள்வி:-** நீ ராமன்மேல் பக்திகொண்ட வைஷ்ணவனாய் இருக்கலாம் அதற்காக சைவத்தில் போற்றப்படுகின்ற இராவணனைச் சிவனடியார் இல்லையென்று எப்படிச் சொல்லுவாய்?

**பதில்:-** அன்பே சிவம் என்பதுதான் சைவம். எனவே கோபத்தை விட்டு அன்பாய்ப் பேசலாம்.

நான் சைவனா வைஷ்ணவனா என்பதுபற்றிப் பிறகு ஆராயலாம்; முதலில் உங்கள் கேள்விக்குப் பதில்!

சுந்தரமூர்த்திநாயனாரையும் சேக்கிழாரையும் மணிவாசகரையும் சுத்தமான சைவர்களாய் நீங்கள் ஏற்பீர்கள் என நினைக்கிறேன் அப்படி ஏற்றுக்கொண்டால்......

சிவனடியார்களைப்பற்றித் தொகுத்துக்கூற திருத்தொண்டர் தொகைபாடிய சுந்தரர் ஏன் சிவனடியார்கள் வரிசையில் இராவணனைச் சேர்க்கவில்லை.

ஒருவேளை சுந்தரரும் வைஷ்ணவரோ?

அவரைத்தான் விடுங்கள் பலதைப் பாடியதால் அவசரத்தில் விட்டிருக்கலாம். பின்வந்த இந்த சேக்கிழார் திருத்தொண்டர் தொகையை மூலமாய் வைத்து திருத்தொண்டர் புராணம் என்றபெயரில் பின்வந்தோர் பெரியபுராணம் என்று போற்றும் வகையில் அடியார் வரலாற்றைவிரித்து ஒரேயொரு நூல் செய்தாரே! அவராவது இராவணனைச் சிவனடியார் ''லிஸ்டில்'' சேர்த்திருக்கக் கூடாதா?

சுந்தரரைப் பின்பற்றிப் பாடியதால் விட்டிருப்பார் என்று கூறலாம் என்றால் சுந்தரர் பாடாத சிலரையும் அடியாராகப்பாடி அதற்கும் வகையில்லாமற் பண்ணிவிட்டார் இந்தச் சேக்கிழார்: சாதாரண மனுநீதிகண்ட சோழனையே பாடியவர் நீங்கள் சொல்வதுபோல் சைவம் போற்றும் இராவணனை ஏன் சிவனடியாராய்ப் பாடவில்லை?

ஒருவேளை சேக்கிழாரும் வைஷ்ணவரோ?

சரி! இந்த மணிவாசகரைத்தான் பாருங்களேன். கொஞ்சம் கூட மரியாதை இல்லாமல் உங்கள் சிவனடியார் இராவணனை தன் திருவுந்தியாரில் ''தேரை நிறுத்தி மலையெடுத்தான் சிரம்ஈரைந்தும் இற்றவாறுந்திபற இருபதும் இற்றதென்று தீபற'' என்று என்ன மாய் நையாண்டி பண்ணுகிறார்

ஒருவேளை மணிவாசகரும்...........
சரி! இனி உங்கள் இராவணனைப் பற்றி! மன்னிக்கவும் சிவனடியார் இராவணனைப்பற்றிச் சற்றுப் பார்க்கலாம். புஷ்பக விமானத்தில் உங்கள் சிவனடியார் இராவணன் போய்க் கொண்டு இருக்கிறார். வழியில் கைலாயம் தடுக்கிறது; சிவன் இருக்கும் மலை எனத் தெரிந்ததும் உங்கள் சிவனடியார் இராவணன், 'சூழுதல் வேண்டும் துதித்திடல் வேண்டும்' என்றெல்லாம் நினைக்கவில்லை. சரி! அதைத்தான் விடுங்கள், சிவனிருக்கும் மலையாயிற்றே! நாம் சற்று விலகிப் போவோம் என்றாவது நினைத்தாரா இந்தச் சிவனடியார் என்றால் அதுவும் இல்லை. கைலாயத்தையே பெயர்க்கிறேன் என்றல்லவா புறப்பட்டார். இது சிவனடியாரின் எந்த லட்சணத்தில் வரும் என்று உண்மைச் சைவராகிய நீங்கள்தான் சொல்ல வேண்டும்.

இதையெல்லாம் கூட விட்டுவிடலாம். இறைவனால் நசுக்கப்பட்டு சாமகீதம்பாடி அதனால் இறைவன் மகிழ்ந்து என்னவரம் வேண்டும் என்று கேட்க உங்கள் சிவனடியார் எதைக் கேட்டார் தெரியுமோ? இறைவனே முன்வந்து காட்சி கொடுத்த பின்னரும் கூட ஆணவம் அடங்காது போருக்கு வாளை வரமாகக் கேட்ட இராவணனைச் சுத்த சைவராகிய நீங்கள் வேண்டுமானால் சிவனடியாராய் ஏற்றுக் கொள்ளலாம். 'கூடும்', அன்பினில் கும்பிடலே அன்றி வீடும் வேண்டா விறலினர்' என்று சேக்கிழாரால் இனம் காட்டப்பட்ட சிவனடியார் வரிசையில் உங்கள் இராவணனைச் சேர்க்க இந்த வைஷ்ணவனால் (உங்கள்கருத்துப்படி) முடியவில்லை.

**கமலாசினி. ஓடை ஒழுங்கை வண்ணார்பண்ணை, யாழ்.**

**கேள்வி:-** சென்றமுறை சமய மாற்றம் பற்றிக் கேட்டதற்கு அதை வன்மையாய்க் கண்டிக்காமல் பாரபட்சமாய்ப் பதில் சொல்லியிருக்கிறீர்கள். இன்றைய எமது மக்களின் வறுமையை பயன்படுத்திப் பணத்தாசை காட்டிப் பலபேரைக் கிறீஸ்தவ சமயத்திற்கு மாற்றம் செய்கின்றனரே! இதைச்சரியென்று சொல்கிறீர்களா?

**பதில்!-** சென்றமுறை என் கண்டனத்தை காரணத்தோடுதான் தெரிவிக்காமல் விட்டேன். பிறரைக் கண்டிப்பதற்கு முன் நம்மைத்திருத்திக் கொள்ள வேண்டும் என நினைப்பவன் நான். இம்முறையும் நீங்கள் கேட்பதால் பணம் கொடுத்துச் சமயம் மாற்றுவதுபற்றி நான் சொல்லத்தான் வேண்டும். முதலில் சமயம் மாறுவோர் பற்றிச் சொல்வதனால் அவர்கள் இந்துசமயத்தை விளங்கி அதை ஏற்காமல் போகவில்லை. அதேபோல் கிறீஸ்தவ சமயத்தைவிளக்கி அதை ஏற்றும் போகவில்லை.

பின் ஏன் போகிறார்கள் என்றால் அதற்கு முழுக்காரணம் வறுமையே.
அவர்கள் வறுமைநீங்கி சந்தோஷமாய் வாழ்வதுபற்றி ஒரு உண்மைச் சைவன் என்ற முறையில் நான் மகிழ்ச்சியே அடைகிறேன். இதைச் சொல்வதால் பலர் என்னோடு கோவிக்கலாம். எந்த உண்மைச் சைவனும் இதைத்தான் சொல்வான்.
ஆனால் இச் செயல் சரியா என்று சிந்திக்க வேண்டும். உன்னாலும் உன் இந்துசமயத்தாலும் எங்கள் வறுமையைப் போக்க முடியவில்லை. எங்களுக்கு வசதி அமைத்துத் தருகின்ற சமயத்திற்கு நாம் மாறினால் அதில் என்ன பிழை என மாறியவர்கள் கேட்கிறார்கள்.
அவர்களுக்கு நான் சொல்லும் பதில்......
'வசதி குறைந்த கணவனால் சேலை நகை வாங்கித்தந்து என்னை வசதியாய் வைத்திருக்க முடியவில்லை; அதனால் அவற்றை வாங்கித்தர முன்வந்தவனோடு போகிறேன்' என்று ஒரு பெண் சொல்வது சரியானால் நீங்கள் சொல்வதும் சரிதான் நல்ல வசதிக்காக பெற்றதாயை அனாதையாய் விட்டுப் போகின்ற பிள்ளையின் செயல் சரிதான். என்றால் நீங்கள் செய்வதும் சரிதான். வசதிக்காக மாறுவது என்று வந்துவிட்டால் கலை, கலாச்சாரம், பண்பாடு, ஒழுக்கம் என்று எதுவும் இல்லாமல் போய்விடும் அப்படிப் போகட்டும் என்றால் நீங்கள் தாராளமாய் மாறுங்கள் இதற்குமேல் சொல்ல விரும்பவில்லை.
இனி சமயம் மாற்றுவோர் பற்றி
மற்றவர்கள் பாவத்தைச் சுமக்கிறேன் என்று சிலுவையைச் சுமந்துசென்று மற்றவர்களுக்காய் அச் சிலுவையிலேயே தொங்கிய யேசுகிறிஸ்துவின் முகத்தில் தெரியும் அன்பும், கருணையும், சாந்தமும் வேறு சமயத்தவனாய் இருந்தும் எனக்கு தெய்வீகத்தைக் காட்டவே செய்கிறது 'அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்' என்ற சுந்தரர் வாக்குப்படி அவரை உண்மையாகப் பணிபவன் நான்; யேசுகிறிஸ்துவிலோ அவர் காட்டும் அன்பு நெறியிலோ எந்தத் தவறும் சொல்ல முடியாது, என்பது உண்மையே. ஆனால் அவர் சமயத்திற்கு பணத்தைக் காட்டி பிறசமயத்தவரை ஈர்ப்பது சரியா?
சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.
அதைச் சரியென்று சொல்லிப் பணம் கொடுத்துச் சமயம் மாற்றுபவர்களுக்கு ஒன்று சொல்வேன்.
நீங்கள் யேசுவின் வழியைப் பின்பற்றுவோர் அல்ல.
முப்பது வெள்ளிக்காசுக்காக மனம் மாறி யேசுவைக் காட்டிக் கொடுத்தவனின் செயல் சரியென்றால் நீங்கள் செய்வதும் சரியே. எனவே நீங்கள் யேசுகிறிஸ்துவின் சமயத்திற்கு மற்றவர்களை மாற்றவில்லை. யேசுவைக் காட்டிக் கொடுத்தவனின் சமயத்திற்கே மாற்றுகிறீர்கள்
மனவருத்தத்துடனேயே இதை எழுதுகிறேன். சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து திருந்துவார்களா?

ஓசையொலி யெலாம் ஆனாய் நீயே
உலகுக்கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ

— அப்பர்.


# J. M. Damian Rodrigo & co


GENERAL MERCHANTS
&
COMMISSION AGENTS

172, Maliban Street
COLOMBO-11.

ALAYAMANI Registered as a News Paper at G. P. O.
Sri Lanka JQ 107/News/89



அடையா நெடுங்கதவின்
அடையாளம்
"ஆலயமணியின்"
ஓசைப்பரம்பல் சண்முகக்கவசமாய்
சுப்பிரபாதமாய் எங்கும்
தங்குவதாகுக!



P. B. UMBICHY LTD.
P. O. BOX 846
No. 28, 4th Cross Street,
COLOMBO-11.

இச்சஞ்சிகை 28, குமாரசாமி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் முகவரியில் வாழும் ஆசிரியரும் வெளியிடுபவருமான புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்களால் யாழ் - ஸ்ரீலங்கா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.